# வீட்டுப் பறவைகள்

ச.கு.கணபதிஐயர்



12569

கிராம ஜோதி நூலகம்
யிலாப்பூர், சென்னை.

# வீட்டுப் பறவைகள்

ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.

கிராமஜோதி நூலகம்

*15/1, மந்தைவெளி லேன்,*

*மயிலாப்பூர் : : சென்னை 4*

உரிமை பதிவு] 1951 [விலை ரூ. 1-4-0

# முகவுரை

கோழி வளர்ப்பை நம்மவர் சிறிய அளவில் மேற்கொண்டு லாபம் பெறும் விதத்தை விளக்கியும், உள்நாட்டு இனங்களைப் பாதுகாக்கும் அவசியத்தை வற்புறுத்தியும் **கோழிப் பண்ணை** என்ற நூலை 1949-இல் எழுதி வெளியிட்டேன். அது வெளி வந்த பின் பலர் என்னுடைய முறைகளில் கோழிப்பண்ணையைத் தொடங்கியிருப்பதாக எனக்குத் தெரிவித்தார்கள். சிலருடைய பண்ணைகளை நான் நேரிலும் பார்த்தேன்.

அந்த நூலைப் படித்த அன்பர் சிலர், 'முட்டைகளின் பெருக்கத்துக்கு நாம் என்ன செய்யவேண்டும்?' என்பதை விளக்கும்படி எனக்கு எழுதினார்கள். அதன் பின் **கோழி முட்டை உற்பத்தி** என்ற சிறு புத்தகத்தை 1950-இல் வெளியிட்டேன்.

பின்னும் சிலர், 'கோழிகளின் நோய்களைப் பற்றி நீங்கள் கோழிப்பண்ணை என்ற நூலில் அதிகமாக விளக்கவில்லையே!' என்று கேட்டிருக்கிறார்கள். நம் நாட்டில் பழங்கால முதற்கொண்டே கோழி வைத்தியம் கைம்முறைகளாகக் கிராமங்களின் மூலை முடுக்குகளில் சிதறிக் கிடக்கின்றது. நம் நாட்டுப் பழைய முறை அது. அந்தக் கைம்முறைகள் சிறந்தன என்பது என் நம்பிக்கை. அதனால் அவைகளைத் திரட்டி வெளியிட முயன்று வருகிறேன். சோதனைகளும் நடந்து வருகின்றன. இதற்கிடையில் இலங்கையிலுள்ள அன்பர் ஒருவர், தற்செயலாக—நான் எதிர்பாராத நிலையில்—நாட்டு வைத்திய முறைகளில் சிலவற்றை எனக்கு அறிவித்து அவைகளில் தமக்கு வாய்த்திருக்கும் பற்றுதலையும் காட்டினார். நான் சோதனை செய்து பார்த்த முறைகளோடு அம்முறைகள் ஒத்திருக்கின்றன. கோழி நோய்களின் பரிகார முறைகள்-பழைய நாட்டு வைத்திய முறைகள் - நம் நாட்டில் மாத்திரம் அல்லாமல் தமிழ் மக்கள் வசித்துவரும் இலங்கையிலும் இருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். நிற்க; எவ்வித ஆதரவும் இல்லாமல் சோதனைகளைப் பலமுறை செய்து செய்து பலனைக் கண்டறிய வேண்டியிருப்பதால் அந்தப் புத்தகம் வெளிவரக் கால தாமதம் ஏற்படலாம்.

இதனிடையில் **வீட்டுப் பறவைகள்** என்ற இப் புத்தகம் வெளி வருகிறது. இதில் கோழி, குள்ள வாத்து, வாத்து, வான் கோழி, கினியா, மயில், புரு என்னும் எழு பிராணிகளைப்பற்றிய செய் திகள் காணப்படுகின்றன. இந் நூலிலுள்ள 'நாட்டுக் கோழி வளர்ப்பு', 'ஐம்பது ரூபாயில் கோழிப்பண்ணை' என்பன **கிராம ராஜ்யம்** என்ற பத்திரிகையில் வெளியானவை. மற்றவை இப் புத்தகத்துக்கென்று எழுதப் பெற்றவை.

இந்தப் புத்தகத்துடன் கோழிப்பண்ணை என்ற நூலையும் படித்துவிட்டு ஒருவர் நல்ல முறையில் வீட்டுப் பறவைகளை வளர்க்க முடியும் என்பது என் நம்பிக்கை.

30-6-1951
மயிலாப்பூர், சென்னை.

இங்ஙனம்
ச. து. சு.


# பொருள் அடக்கம்

| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கோழி இனம் | ... | 1 |
| 2. | நாட்டுக் கோழி வளர்ப்பு | .... | 5 |
| 3. | ஐம்பது ரூபாயில் கோழிப் பண்ணை | ... | 11 |
| 4. | குள்ள வாத்து | ... | 17 |
| 5. | வாத்து | .... | 42 |
| 6. | வான் கோழி | ... | 51 |
| 7. | கினியாக் கோழி | .... | 58 |
| 8. | மயில் | .... | 64 |
| 9. | புறா | ... | 70 |

# வீட்டுப் பறவைகள்

## 1. கோழி இனம்

இப்பொழுது நம் நாட்டில் மூன்று வகையான கோழிகள் இருக்கின்றன. இந்தியாவுக்கு வெளியிடங்களிலிருந்து கொண்டு வந்து இங்கே வளர்க்கப்படும் வெள்ளை லெக்ஹார்ன், கருமைனர்க்கா, ரோட் ஐலந்துச் சிவலைகள் (Rhode Island Reds) முதலியன ஒருவகை. நம் நாட்டிலேயே பழங்கால முதல் பரம்பரையாக இருந்து வரும் உள்நாட்டு இனங்கள் இரண்டாம் வகை. அயல் நாட்டுச் சேவலுக்கும் உள்நாட்டுப் பெடைக்கும் உற்பத்தியான கலப்பு ஜாதிகள் மூன்றாம் வகை. இவை பொதுவில் கோழிகள் என்றே வழங்கப் பெறும்.




வெள்ளை லெக்ஹார்ன்

பல அம்சங்களில் கோழிகளுடன் ஒப்பிடத் தக்க வேறு பறவைகளும் இருக்கின்றன. வாத்து

(Goose), குள்ள வாத்து (Duck), அன்னம், டர்க்கி என்று வழங்கும் வான்கோழி, மயில், கினியாக் கோழி என்பவைகளுக்கும் கோழிகளுக்கும் எத்தனையோ விதங்களில் ஒற்றுமை காணப்படு கின்றது. இவைகளின் உடலமைப்பு பெரும் பாலும் ஒத்திருக்கின்றது. இவைகளின் உணவு வகைகளும் ஏறத்தாழ ஒரு விதமாகவே உள்ளன. நோய்களும் அப்படியே. இந்தக் காரணங்களால் மேலே கூறிய பறவைகளையெல்லாம் கோழி இனம் அல்லது கோழிக் குடும்பம் (Hen family) என்று உயிர்நூற் புலவர் கூறுவர்.

கோழிக் குடும்பத்தில் வாத்து முதலிய பிற பறவைகளைவிடக் கோழிகளே சிறப்புடையன வாகும். வேறு பறவைகளின் முட்டைகள் கோழி முட்டை களுக்கு ஒப்பாக மாட்டா. கோழி முட்டைக்கே மதிப்பும் கிராக்கியும் அதி கம். கோழிக் குடும்பத்தில் அடை காக் கும் திறமை சில பறவைகளுக்கு இல்லை. அவைக ளின் முட்டைகளைக்கூடக் கோழிகள் பொறுமை



கரு மைனர்க்கா

யுடன் அடை காத்து வந்து குஞ்சுகள் வெளிப் பட்ட பிறகு அந்தக் குஞ்சுகளைச் சிலவாரம் காப் பாற்றி வருகின்றன. வாத்துமுட்டை, வான்கோழி யின் முட்டை, கினியாவின் முட்டை என்று வேறுபாடு பாராட்டாமல் எல்லா முட்டைகளையும் அடை காத்துக் குஞ்சுகளை வளர்ப்பதற்குக் கோழியினிடம் அமைந்திருக்கும் தாய்மைக் குணத்தை நினைத்துப் பார்த்தால், இனத்தின் தலைமையைக் கோழிக்கு அன்றி வேறு எந்தப் பறவைக்கு வழங்க முடியும்! கோழியின் சிறப்புக்கு மற்றொரு காரணமும் உண்டு. அடையிலுள்ள கோழி முட்டையிலிருந்து 21 நாளில் குஞ்சு வெளிப் பட்டுவிடும். வேறு பறவைகளின் முட்டையி லிருந்து குஞ்சு வெளிவர 28 முதல் 31 நாள் செல் லும். ஆகவே, கோழிக்குரிய முதலிடத்தை அந்தக் குடும்பத்தில் வேறு எந்தப் பறவையும் கைப் பற்றிக் கொள்ள முடியாது.

இக்காலத்தில் பிராணி வளர்ப்பில் புதிய விஞ் ஞான முறைகள் தோன்றியுள்ளன. விஞ்ஞானத் தின் ஆதரவினால் கோழிவளர்ப்பு ஓங்கியிருக்கிறது. முட்டைகளை அடைகாப்பதையும் குஞ்சுகளை வளர்ப்பதையும் இயந்திரங்களே மேற்கொண் டுள்ளன. செயற்கை அடைகாப்புப் பொறியும் (Incubator), செயற்கைக் குஞ்சு வளர்ப்புப் பொறி யும் (Brooder) தோன்றியபின் கோழிகளின் அடைகாப்புத் திறமை மறைந்து வருகிறது. பல ஜாதிக்கோழிகள் இப்பொழுது அடைகாப்பதில்லை. அதிகமான பறவைகளை வளர்ப்பவர்களுக்குப் பொறிகள் அவசியமாகலாம். ஆனால் நம் நாட்டில்

பெரும்பாலோர் சில சில கோழிகளையே வளர்க்கிறவர்கள். அதனுல் நாம் நம் கோழிகளின் அடைகாப்புத் திறமையை மாற்றிவைக்க முயல்வது சரியாகாது. அதனுல் நாட்டுக் கோழி வளர்ப்பு நமக்கு எவ்வகையிலும் இன்றியமையாதது.

கோழிகளைப் போலவே நம்மவர் குள்ள வாத்து, வாத்து, வான்கோழி முதலியவற்றையும் வளர்க்க வேண்டும். நம் கிராமங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு இவைகளும் வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் இந்தப் புத்தகம் எழுதப்படுகிறது.

# 2. நாட்டுக் கோழி வளர்ப்பு

கோழி வளர்ப்பு நம் நாட்டில் அநாதி காலம் தொட்டு வருவது. நம் முன்னோர்கள் எதனையும் அடிப்படையான ஒரு நல்ல நோக்கத்துடன் தான் மேற்கொள்வார்கள். கிராம மக்களுக்கு உபதொழிலாகக் கோழிவளர்ப்பு நன்மை தரும் என்ற நோக்கத்தோடு அவர்கள் இதை மேற்கொண்டார்கள். இந்தியக் கோழிகள் சிறந்திருந்தன. பிற்காலத்தில் நம் தேசத்தில் கிராம அமைப்புச் சீர்குலைந்தது. வறுமைப்பேயின் கொலுமண்டபமாகக் கிராமம் மாறி விட்டது. இந்த நிலையில் நம்மவர் அரிய பல தொழில்களை மறந்ததுபோல் கோழிவளர்ப்பு முறையையும் மறந்து போனார்கள். வளர்ப்புக் குன்றியது.

ஆங்கில அரசாட்சி இங்கே ஏற்பட்ட பிறகு நமக்குக் கோழிவளர்ப்பைப் பழக்கிக் கொடுக்க முன் வந்தவர்கள் பாதிரிமார்கள். அவர்கள் செய்திருக்கிற பேருபகாரத்தை நாம் மறக்க முடியாது. ஆனால் ஒன்று: அவர்கள் அயல்நாட்டுக் கோழிகளின் வளர்ப்பையே வற்புறுத்தினார்கள். துரைத்தனத்தாரும் அவர்களைப் பின்பற்றி அயல்நாட்டுக் கோழிகளையே அரசாங்கப் பண்ணைகளில் முக்கியமாக வைத்துக் கிராம மக்களுக்கு இந்த வளர்ப்பைப்பற்றிப் பிரசாரம் செய்து வரலானார்கள். அயல் நாட்டுக் கோழிகளிலும் இறைச்சி இனங்களை விட்டு, முட்டை இனங்களையே பரப்ப அவர்களெல்லாரும் வேலை செய்து வந்தார்கள்.

பாதிரிமார், சர்க்கார் இவர்கள் அயல்நாட்டுக் கோழிகளை ஆதரித்து வருவதெல்லாம் அவை

நிறைய முட்டையிடுகின்றன என்பதனாலேதான். முட்டையிடும் திறமையில் முதன்மை வாய்ந்த அயல் நாட்டுக்கோழி ஒன்று வெளி நாடுகளில் ஒரு வருஷத்தில் 280 முட்டைகள் இடுகின்றது. ஆனால் அத்தகைய கோழி நம் நாட்டில் 180 முட்டைகளுக்கு மேல் இடுவதில்லை. அந்தக் கோழி இந்தத் தேசத்திலேயே பழக்கப்பட்டுப் போய்விட்டால் இரண்டு மூன்று தலைமுறைக்குள் அதன் சந்ததிகளுக்கு முட்டையிடும் திறமை பின்னும் குறைந்து போகிறது. அவை நாட்டுக் கோழிகளின் நிலைக்கு வந்துவிடுகின்றன.


அயல் நாட்டுப் பறவைகளை வெயிலில் நடமாட விடாமல், வேறு இனங்களோடு சேர்ந்து திரிய அநுமதிக்காமல், இரும்பு வலை அடைப்பில் வைத்து உயர்தரமான உணவையும் பிற போஷணைகளையும் கொடுத்து விஞ்ஞான ரீதி அறிந்து வளர்த்துவர வேண்டும். இந்த வளர்ப்புச் செலவுகளையும் உழைப்பையும் அவை இடும் முட்டைக் கணக்கோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அயல்நாட்டுக் கோழி வளர்ப்பு லாபமுள்ளது என்று சொல்லவே முடியாது. சர்க்கார்ப் பண்ணைகள் கோழிகளுக்குச் செலவிடுவது, அவற்றிலிருந்து வரும் வருவாயைவிட அதிகமாக இருப்பதைக் கொண்டே இதை நிரூபிக்கலாம்.

அயல்நாட்டுக் கோழிகளின் முட்டைகளை விட நாட்டுக் கோழிகளின் முட்டைகள் சிறந்தவை என்பது என் சொந்த அபிப்பிராயம். எப்படி என்று பார்ப்போம்: மாடுகளில் மிகுதியாகப் பால் தரும் பசுக்களின் பாலைவிடக் குறைவாகத் தரும் பசுக்களின்

பால்தான் ருசியாக இருக்கிறது; சிறந்ததாகவும் இருக்கிறது. இதனை அயல்நாட்டு விஞ்ஞானிகளே ஒப்புக்கொள்கிறார்கள். கோழி முட்டைகளின் விஷயத்திலும் இப்படித்தான். பொறுமையுடன் 21 நாள் அடையில் இருப்பதும், குஞ்சுகளை உட னிருந்து சிலவாரம் சிறகுகளில் அணைத்துக் காப் பாற்றுவதுமாகிய தாய்மைக்குணம், — அன்பின் தியாகம்—அயல் நாட்டுப் பறவைகளுக்கு அணுவள வும் இல்லை. (அவை அடையில் உட்காருவதில்லை.) இதனால் அவை இடும் முட்டைகளுக்கும் அந்த இயல்பு சிறிதும் இல்லை என்பது என் கருத்து. பசுவின் பாலைப் பருகுவோருக்குப் பசுவின் இயல் பும் எருமைப் பாலைப் பருகுவோருக்கு எருமையின் இயல்பும் தோன்றக்கூடும் என்று நம் நாட்டில் பெரியவர்கள் கருதுகிறார்கள். உயிர்நூற் புலவர் கள் தக்க காரணத்தை அறியமாட்டாமையின் இந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ள மாட் டார்கள். மனிதனுடைய ஆராய்ச்சிக்கு எட் டாத சிருஷ்டி அம்சங்கள், உயிர்ப் பண்புகள் பல உள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது. நாட்டுக் கோழிகள் இடும் முட்டைகள் எண்ணிக் கையில் குறைவே என்றாலும் இந்த ஒரு பண்பே (தாய்மைக் குணமே) அவற்றின் தகுதிக்குச் சாட்சி யாகும்.

கிராமங்களில் உப தொழிலுக்காகக் கோழி களை வளர்ப்பவர் விஞ்ஞான முறை அறிந்து வளர்க் கும் திறமையுடையவர்கள் அல்லர். இப்பொழுது அயல் நாட்டுப் பறவைகளை வளர்த்து வருகிறவர் களுக்கு வாய்த்திருக்கிற அந்தஸ்தோ, இட

வசதியோ அவர்களுக்கு இல்லை. எளியவர்கள் தங்கள் நிலைக்கு ஏற்ப வளர்த்தால் அந்த வளர்ப்புக்கு இணங்கி விருத்தியாகும் கோழிகளே கிராமவாசிகளுக்கு ஏற்றவையாகும். மேலும் முட்டைகளைப் பெறுவதொன்று மட்டுமே நம்மவர் நோக்கமன்று; இறைச்சிக்




கோழி வீடு

காகவும் வளர்க்கிறவர் பலர். அந்நியதேசப் பறவைகளில் இறைச்சி குறைவு; அதுவும் மட்டரகமானது. அயல் நாட்டுக் கோழிகளை விரும்பி ஆதரித்துவந்த கிராம மக்கள் பலர் அவைகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க முடியாமல் பண்ணைக் கோழிகள் எல்லாம் நோயினால் இறந்துவிடப் பெரிய நஷ்டமடைந்ததை நான் பார்த்திருக்கிறேன்; கேட்டிருக்கிறேன். ஆகவே, அன்று முதல் நாட்டுக் கோழி வளர்ப்பையே நான் வற்புறுத்தி வருகிறேன்.

நாட்டுக் கோழிகளை வளர்க்கப் பெரிய ஆடம்பரமான உபகரணங்கள் வேண்டாம்; நோயை எதிர்த்துப் போராடும் வன்மை அவைகளிடம் இருக்கின்றது. நல்ல முறையில் வளர்த்தால் ஒரு நாட்டுக் கோழி வருஷம் ஒன்றில் 120 முட்டைகளைத் தரக் கூடும்.

ஆராய்ச்சிப் பண்ணைகளை வைத்து நடத்துவோர் சிலர், "கலப்பினங்களை வளர்ப்பது நல்லது" என்று சொல்லுகிறார்கள். கலப்பினம் என்பது அயல்நாட்டுச் சேவலுக்கும் உள்நாட்டுப் பேடைக்கும் பிறந்த சந்ததியே. முட்டை உற்பத்திக்கு நாட்டுக்கோழியைவிடக் கலப்பினம் நல்லதுதான். ஆனால் அவற்றின் பின்சந்ததிகள் நாட்டுக் கோழிகள் ஆகிவிடுகின்றன. சில சமயம் அவைகளைவிட மோசமாகிப் போகின்றன. இந்த ஏற்பாட்டினால் உள் நாட்டு இனங்கள் குன்றி, ஜாதிக் கலப்பு ஏற்பட்டு வருகிறது. உயர்ந்த சில நாட்டு ஜாதிகள் கலப்பில்லாமல் தனியாக விருத்தி அடைந்து வரு



1. பச்சை உணவு பெற்ற குஞ்சு
2. பச்சை உணவு பெறாத குஞ்சு

வது மிகவும் இன்றியமையாதது. மட்டமான நாட்டுப் பேடைகளை ஒழித்துக் கட்ட நாம் கலப்பின முறையையும் கைக்கொள்ள வேண்டியதுதான்.

நாட்டுக் கோழிகளிடமும் முட்டைகளை அதிக மாகப் பெற வழிகள் உள்ளன. நம்மவர் அவை களைக் கையாள வேண்டும். காலும் மூக்கும் குட்டை யாக உள்ள கோழிகளை அவர்கள் தேடிக் கொண்டு வந்து விருத்தி செய்ய வேண்டும். $2\frac{1}{2}$ பிராயத்துக்கு மேற்பட்ட கோழியைப் பண்ணையில் வைத்துக் கொள்ளக் கூடாது. 10 பேடைகளுக்கு ஒரு நல்ல சேவலை வாங்கி வளர்க்க வேண்டும். வழக்கமான ஆகாரத்துடன் தளிர்களையும் வெங்காயத்தையும் கிளிஞ்சில் ஓட்டின் துணுக்குகளையும் கோழிகளுக்குத் தர வேண் டும். கடலையை இரண்டுநாள் நீரில் ஊறவைத்து முளை தோன்றிய பின் அதைக் கோழிக்குக் கொடுத்தால் 15 நாட்களில் கோழி கொழு கொழு என்றாகி விடுகிறது. நான் கண்டறிந்த சோதனை இது. கூடியமட்டில் குப்பைகளிலும் சேறு மிகுந்த இடங் களிலும் அவைகளை நடமாட விடக்கூடாது.

எவ்வளவு குறைவாக மதிப்பிட்டுக் கணக்குப் பார்த்தாலும் ஒரு நாட்டுப் பேடையின் மூலம் வரு ஷத்தில் எட்டு ரூபாய் லாபம் கிடைக்கிறது. வளர்ப் போரின் திறமையைப் பொறுத்து லாபம் இன்னும் உயரக்கூடும். 10 கோழிகளை வளர்க்கும் சிறிய வளர்ப்புக்காரருக்குப் பிரயாசை ஒன்றும் இல்லா மல் ஒரு வருஷத்தில் ரூபாய் 80 கிடைக்கிறது. வளர்ப்பவர் ஒரு நாளும் நஷ்டம் அடைவதே இல்லை. குடியானவர் அதிகச் சிரமமும் மூலதனமும் இல்லா மல் மேற்கொள்ளக்கூடிய உப தொழில் இது. ஊர் களில் இது பரவ வேண்டும்.

---

## 3. ஐம்பது ரூபாயில் கோழிப் பண்ணை

'ஏழைக் கிராமவாசி ஒருவர் அவருடைய தகுதிக்கு ஏற்ப ஒரு கோழிப் பண்ணையை ஏற்படுத்தும் விதம் எப்படி?' என்று என் நண்பர் ஒருவர் எழுதியுள்ளார். மற்றொருவர், 'ரூ. 100 மூலதனம் போட்டுக் கோழி வளர்ப்பை மேற்கொள்ள என்ன என்ன முறைகளைக் கையாள வேண்டும்?' என்று கேட்டிருக்கிறார். கிராமங்களில் கோழிகளை வளர்த்து வருகிறவர்கள் எல்லாம் இந்தத் தொகையைக்கூடப் போடாமல் சிறு அளவில் கோழிகளை வளர்த்து வருகிறார்கள். வீட்டின் தேவைக்கு ஐந்தாறு கோழிகளை வளர்த்தல் போதுமானது என்று அவர்கள் தங்கள் அநுபவத்திலிருந்து சொல்லக் கூடும். அவர்களுடைய அநுபவம் புதிதாகப் பண்ணையைத் தொடங்குவோர்க்கு நல்ல பாடமாகும். அவர்களைக் கேட்டால் நம் நண்பர்களின் வினாவுக்கு ஏற்ற விடை கிடைத்துவிடும். அவர்கள் ரீதியில் கோழிப் பண்ணை ஒன்றைத் தொடங்குவதற்கு ரூ. 100 கூடத் தேவையில்லை. ஏழைகளுக்கு இந்தத் தொகை சொற்ப மூலதனம் ஆகாது. அவர்கள் தகுதிக்கு ரூ. 50 கூடப் பெரிய மூலதனந்தான். எல்லோரும் மற்றவர்களை இதைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருக்க முடியாதென்று கருதி நான் இங்கே 'ரூ. 50-இல் கோழிப் பண்ணை' என்ற இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

### கோழி வீடும் நடமாடும் இடமும்

ஏழைக் குடியானவரின் வீடு சிறு குடிசையாகத் தான் இருக்க முடியும். அந்தக் குடிசை வாழ்வுக்கு

ஏற்ப அவர் சில கோழிகளைத்தான் ஆரோக்கிய முறையில் வளர்க்கலாம். ஏனென்றால், கோழிகள் மழை வெயிலிலும் இரவிலும் அண்டுவதற்கு அவைகளுக்குப் போதிய இடம் வேண்டும். காலாற நடமாடித் திரிந்து வரச் சிறிய இடம் (Range) ஒன்றும் அவசியம். பிறர் வளர்க்கும் கோழிகளுடன் கலந்து விடாமல் ஒருவர் தம் கோழிகளைத் தனிமைப் படுத்துவது அவசியம். தனிமைப்படுத்தாத வரையில் நம் கோழிகளுக்கு ஜாதிக் கலப்பு ஏற்பட்டு விடும். நாம் உயர்ந்த ஜாதிக் கோழிகளை வாங்கி வளர்த்தாலும் அவை பக்கத்தார் வளர்க்கும் மட்டமான கோழிகளுடன் கலந்து இனக் கலப்பு ஏற்பட்டு விடுவது கிராமங்களில் சகஜமாக இருக்கிறது. ஓர் இடத்தில் தோன்றும் கோழி நோய் ஊர் முழுவதும் பரவுவதற்கு இந்தக் கலப்பே காரணம். ஆகையால் சிறு குடிசை உடையவர் தம் கோழிகளைத் தனியே வைக்க ஏற்பாடு செய்த பிறகு தான் கோழி வளர்ப்பைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்பொழுது அவர் லாபம் பெறுவது உறுதி.

## வீட்டின் அமைப்பு

கோழிகளை அடைக்கும் அறைக்கும் நடமாடும் இடத்துக்கும் ஏழைக்கு வசதி இருக்கிறதா? ஆம், இருக்கிறது என்றுதான் நான் சொல்லுவேன். குடிசைக்கு வெளித் திண்ணை இருந்தால் அதன் ஒரு புறத்தில் மூங்கில் பிளாச்சுகளால் படல்களைச் செய்து திண்ணையின் இரண்டு புறங்களை அடைத்து விட வேண்டும். மற்ற இரு புறமும் குடிசையின் சுவர்களே அடைப்பாக உதவுகின்றன. இப்படி அமையும் இடமே கோழி அறையாகும். ஏழை

களின் கோழி அறை இதற்கு மேல் பெரிதாகவோ வசதியுள்ளதாகவோ இருக்க முடியாது. இந்த அறையில் காற்றோட்டத்துக்குப் பஞ்சமிராது. குடிசை மேற்குப் பார்த்த வாசலையுடையதாக இருந்தால் சிறிது கஷ்டம் ஏற்படும். எப்படி என்றால், மத்தியான முதல் கோழி வீட்டில் வெயில் உறைக்கும். அதனால் வெயில் படாமல் ஏதேனும் உபாயத்தை அவர் தேட வேண்டும். வீட்டின் முன்னே திண்ணைக்கு அருகில் ஒரு மரத்தை வளர்த்து வெயில் படாதபடி மறைப்பை அவர் உண்டு பண்ணலாம். குடிசை வேறு திசைகளைப் பார்த்து இருப்பதால் வெயில் பிரச்னை அவ்வளவாக இராது.

## நடமாடும் இடம்

கிராமங்களில் வீடுகள் பெரும்பாலும் தனித் தனியாகவே இருக்கின்றன. ஆகையினால் ஒருவர் தம் வீட்டைச் சுற்றிலும் வேலி போட்டு, சுற்றுச் சுவர் (காம்பவுண்டுச் சுவர்) போல் அதனை ஆக்கிக் கொள்ள வேண்டும். இவ்விதமாக வேலி அமைப்பு ஏற்பட்டுவிட்டால் நம் வீட்டுக் கோழிகள் இந்த அமைப்புக்குள் திரிந்து வருதல் கூடும். வெளியே போய் மற்றவரின் பறவைகளோடு கலவாமல் இருப்பதற்கு நாம் அமைக்கும் நடமாடும் இடம் இது தான்.

மேலே கூறிய முறையில் வீடும் நடமாடும் இடமும் அமைந்த குடிசைகள் சிலவற்றை நான் பல ஊர்களில் பார்த்திருக்கிறேன். வீட்டார் காலையில் வேலைக்கு வெளியே போய்விடுகிறார்கள். மாலையில் தான் அவர்கள் திரும்பி வருகிறார்கள். பகலெல்

லாம் கோழிகளைக் கூட்டிலிருந்து எடுத்து நடமாடும் இடத்தில் விட்டுச் செல்லுகிறார்கள். காலையில் வேலைக்குப் போகும்போது ஒரு தடவை கோழிகளுக்கு ஆகாரம் தருகிறார்கள். மாலையில் வீடு திரும்பியதும் மறுமுறை ஆகாரம் தந்து அவைகளைக் கூட்டில் அடைத்துவிடுகிறார்கள். பகலெல்லாம் வீட்டைச் சுற்றிலும் பறவைகள் சுதந்தரமாகத் திரிகின்றன. இத்தகைய ஏற்பாட்டில் வளரும் கோழிகள் ஒழுங்காக உணவைப் பெறுவதால் நோய்வாய்ப் படுவதில்லை. ஜீவனத்தின் பொருட்டு வேறு வேலைகளைச் செய்துகொண்டு கோழிகளை வளர்ப்பதும் எளிதாகிறது.

## எத்தனை கோழிகள்?

தொடக்கத்தில் ஒருவருக்கு ஏழு முதல் பத்துப் பெட்டைக் கோழிகள் போதும். பத்துப் பேடைகளை வளர்ப்போர் அவற்றுடன் ஒரு சேவலையும் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தச் சேவலினால் பேடைகள் சூல் கொள்ளுகின்றன; சந்தோஷமாக வாழ்கின்றன. சிறிய அளவில் கோழிகளை வளர்க்க விரும்புவோருக்கு இத்தனை கோழிகளுக்கு மேல் கூடாது. இந்த அளவு ஒரு கூட்டம் எனப்படும். ஒரு கூட்டத்துக்கும் அதிகம் வைத்துக் கொள்ள விரும்பினால் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தனித் தனி வீடும் நடமாடும் இடமும் அவசியமாகும். இரண்டு கூட்டங்கள் தம்முள் கலந்து போகக் கூடாது. ஏழைக் குடியானவர் அவைகளுக்கு என்ன வசதி செய்துகொள்ளுவார்!

## எவைகளை வாங்குவது ?

பொரிக்கக் கூடிய முட்டைகளையும் அடைகாக்கும் திறமையுள்ள ஒரு கிழக்கோழியையும் முதலில் வாங்கி வைத்துக்கொண்டு பண்ணையைத் தொடங்குவது ஒருவர் கூறும் யோசனை; குஞ்சுகளோடு கூடிய தாய்க் கோழியை வாங்கிக்கொள்வது நல்லது என்பது மற்றும் சிலர் கூறும் யோசனை. எனக்கு இந்த இரு திறத்தாரின் யோசனைகளும் பொருத்தமாகத் தோற்றவில்லை. கோழி நோய்கள் முட்டைப் பருவத்திலும் குஞ்சு நிலையிலுந்தான் அதிகம். நாம் வாங்கும் முட்டைகளோ தாயுடன் வளரும் குஞ்சுகளோ நோயில்லாமல் இருக்கக் கூடும் என்று உறுதியாக நம்பிவிட முடியாது. நோய் இருந்துவிட்டால் சில நாளில் பணணையே பாழாய்விடும். ஆகையால் ஒருவர் தொடக்கத்தில் ஏழு எட்டுக் கன்னிக் கோழிகளை (Pullets) மட்டும் வாங்கவேண்டும். இவை நான்கு மாதம் முதல் ஆறு மாத வளர்ச்சிக்கு உட்பட்டிருக்க வேண்டும். இவைகளுக்குக் கர்ப்பம் வழங்கும் சேவல் ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட ஆயுளையுடையதாக இருக்க வேண்டும். இவற்றுடன் அடைகாக்கும் பொருட்டு ஒரு கிழப் பேடையும் அவசியம். சிலர் கிழப்பேடை இல்லாமல் சமாளிப்பதும் உண்டு.

## செலவினங்கள்

இனி, தொடக்கத்தில் ஏற்படும் செலவுகளைப் பற்றி ஆராய்வோம்: இங்கே தரப்படும் கணக்கு உத்தேசமே. இடத்துக்கு இடம் தொகை சிறிதளவு வேறுபடக் கூடும்.

| | | ரூ. |
|---|---|---|
| கோழி வீடு அமைக்க | ... | 3 |
| வேலி போட்டு நடமாடும் இடம் உண்டு பண்ண | ... | 20 |
| ஏழு கன்னிப் பேடைகள் | .... | 15 |
| ஒரு சேவல் | ... | 3 |
| அடை காக்கும் கோழி | ... | 3 |
| அடை காக்கும் கூடு செய்யவும் சிறு தட்டுமுட்டுச் சாமான் வாங்கவும் | ... | 4 |
| எதிர்பாராத செலவு | .... | 2 |
| மொத்தம் | | 50 |

ரூ. 50 மூலதனம் இருந்தால் சிக்கன முறையில் லாபம் கிடைக்கும் வழியில் ஒருவர் சிறிய பண்ணை ஒன்றைத் தொடங்கக் கூடும். ஒரு கோழி வருஷத்துக்கு 70 முட்டை தரும். ஒருவருக்கு வருஷத்தில் கிடைக்கும் முட்டைகள் சுமார் 500 இருக்கலாம். (கோழியின் தரத்தை உயர்த்திவிட்டால் ஒரு கோழி அப்பொழுது 100 முட்டை தரக்கூடும். மூன்று மாதத்துக்கு ஒரு முறை சில முட்டைகளைப் பொரிக்கவைத்து நல்ல குஞ்சுகளைப் பெறுவதும் அவசியம். பண்ணையின் பிற்காலச் செல்வம் குஞ்சுகளே.


# 4. குள்ள வாத்து

## வாத்து வகைகள்

வாத்து, குள்ள வாத்து என்பன வேறு வேறு இனத்தைச் சேர்ந்தவை. நாம் இரண்டையும் வேற்றுமையின்றி வாத்து என்றே அழைக்கிறோம். விஞ்ஞான ரீதியில் இரண்டுக்கும் பெயர் வேற்றுமை அவசியம். ஆங்கிலேயர் வாத்தை (Goose) என்றும், குள்ள வாத்தை (Duck) என்றும் வழங்குகிறார்கள். இது போலவே நாமும் இவற்றை வேறுபடுத்தியே வழங்குவது நல்லது.



வாத்து



குள்ள வாத்து

உடலமைப்பிலும் பழக்க வழக்கங்களிலும் வாத்துக்கும் குள்ள வாத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக் கவனிப்போம்.

அலகு: குள்ள வாத்துக்கு அலகு தட்டையாகவும் நீண்டும் காணப்படும். வாத்துக்கு இது சிறிதாக இருக்கும்.

கழுத்து: முன்னதுக்குக் கழுத்து குறுகியிருக்கும்.

கால்கள்: வாத்தைவிடக் குள்ள வாத்தின் கால்கள் குட்டையானவை.

தோற்றம்: தரையில் நடமாடும்போது குள்ள வாத்து அழகாக இராது. வாத்து அன்னப் பறவை போல அழகிய காட்சியை வழங்குகிறது.

இயல்புகள்: குள்ள வாத்து ஜலத்தில் நடமாடித் திரிய விரும்பும் அளவு, வாத்து விரும்புவதில்லை. குள்ள வாத்துக்கு ஆயுள் மூன்று வருஷமே; வாத்து 10 அல்லது 12 வருஷமும் அதற்கு மேலும் ஜீவித்திருக்கும். வருஷத்துக்கு 60 முட்டைகளுக்கு மேல் இடாது. குள்ள வாத்து 180ம் அதற்கு மேலும் இடக்கூடும்.

இந்தியாவில் முன்காலத்தில் சிறந்த முட்டை இனக் குள்ள வாத்துகள் இருந்தன என்பது இண்டியன் ரன்னர் (Indian Runner) என்று ஓர் இனம் அமெரிக்காவிலும் இங்கிலாந்து முதலிய இடங்களிலும் இருப்பதிலிருந்து தெரிகிறது. தமிழ் இலக்கியங்களில் ஆதாரம் இல்லையாயினும் வேறு இந்திய மொழிகளில் குள்ள வாத்தின் பிரஸ்தாபம் வருகிறது.

இக்காலத்தில் தென்னிந்தியாவில் நன்செய் நிலப் பிரதேசங்களில் பலர் குள்ள வாத்துகளைக் கூட்டங் கூட்டமாக வளர்த்து வருகிறார்கள். வளர்ப்பவர்கள் ஆறுகள் எங்கே, குளங்கள் எங்கே, ஏரி

கள் எங்கே என்று தங்கள் குள்ளவாத்துக் கூட்டத்தை ஓட்டிச் செல்லுகிறார்கள். அறுவடையான வயல்களில் அவற்றை மேயவிடுகிறார்கள். அறுவடைக் காலங்களில் குள்ள வாத்துகளை வளர்ப்போரில் இரண்டு மூன்று பேர் சேர்ந்துகொண்டு தங்கள் கூட்டங்களை அறுவடையான வயல்களில் மேயவிடுவதற்காக 30 அல்லது 40 மைல் தூரம் கூடச் செல்லுகிறார்கள். அக்காலத்தில் அவர்கள் அங்கங்கேயே தங்கிச் சமையல் செய்துகொண்டு அலைவாழ்க்கையையே மேற்கொண்டிருக்கிறார்கள். இரவு நேரங்களில் குள்ள வாத்துகளை அடைத்து வைப்பதற்காக நாணலும் கயிறும் கொண்டு நீட்டமான படல்களைச் செய்துகொள்ளுகிறார்கள். இந்தப் படல்கள் பாய் போலச் சுருட்டி எடுத்துப் போக வசதியுள்ளனவாக இருக்கின்றன. குஞ்சுகளை அடைப்பதற்குக் கண்கள் அமைந்த கூடைகளைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். அறுவடையான வயல்களில் நாணற்படல்களால் வட்டமாகவோ சதுரமாகவோ அடைப்பை உண்டாக்கிக் கொண்டு இரவில் குள்ள வாத்துகளை இந்த அடைப்பில் வைக்கிறார்கள். மேலே கூரை ஒன்றும் இல்லை. வாத்தினப் பறவைகளுக்குக் கூரை அவசியம் இல்லை. இவர்களெல்லாரும் பரம்பரையாகக் குள்ள வாத்து வளர்க்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இக்காலத்தில் வளர்ப்பு முறைகளில் விஞ்ஞானத்தின் துணையினால் நல்ல அபிவிருத்திகள் ஏற்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு இந்த நூதன முறைகள் தெரியவில்லை. அதனால் குள்ள வாத்தினம் இங்கே இன்னும் ஓங்கவில்லை. எனவே, அமெ

ரிக்கா, ஐரோப்பிய நாடுகள், நியூஸிலாந்து முதலிய இடங்களில் உள்ள குள்ள வாத்துகளோடு நம் குள்ள வாத்துகளை நாம் ஒப்பிட முடியாது. அவை உயர்ந்திருக்கின்றன.

நம் நாட்டில் வாத்தினங்களை நாம் எளிதில் ஓங்கச் செய்யலாம். அயல் நாட்டு இனங்களை இங்கே கொண்டு வந்து வளர்த்து விருத்தி செய்ய வேண்டிய அவசியமே இல்லை. உள்நாட்டு இனங்களை ஆகாரம், பிற வசதிகள் மூலம் ஓங்கச் செய்யலாம். வாத்தினங்களுக்கு நன்செய் நிலந்தான் ஏற்றது என்பது தவறு. களிமண் பூமியைவிடக் கலப்பு மண் நிலத்தில் இவைகள் நன்கு விருத்தியாகின்றன. பல இடங்களில் இக்காலத்தில் மீன் வளத்தைப் பெருக்குவது போல, குட்டைகளை அமைத்து வாத்து வளர்ப்பை நாம் மேற்கொள்ள வேண்டும்.

## வளர்ப்பில் அநுகூலம்

இக்காலத்தில் குள்ள வாத்து முட்டைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. சென்னை போன்ற பெரிய நகரங்களில் குள்ள வாத்து முட்டை ஒன்று ஓரணு முதல் ஒன்றரை அணுவாக இருப்பதே கிராக்கிக்கு அறிகுறியாகும். இறைச்சியின் பொருட்டு வாத்துகளின் விலை உயர்ந்தே இருக்கிறது. பெரிய நகரங்களுக்கு அருகில் வாத்துகளை வளர்ப்பவர்கள் மிகுதியாக லாபம் பெற்றுவருகிறார்கள். கோழி வளர்ப்பை விட இவர்களுக்கு இதில் ஊதியம் அதிகம். இது எப்படி என்று பார்ப்போம்.

கோழிகளைப் போல் வாத்துகளுக்குப் போஷணை முறைகள் வேண்டுவதில்லை. முன்னவைகளுக்கு

மேலான உணவு வகைகள் வேண்டும். வாத்துகள் புழு, பூச்சி, நத்தை, தவளை, சிதறிக்கிடக்கும் புல் பூண்டு, அற்பத் தானியங்கள் முதலியவற்றைத் தாமாகவே தேடிக்கொள்ளும். கோழிகளுக்கு நோய் நொடிகள் அதிகம். ஒன்றன் நோய் மற்றவைகளுக்கு எளிதிலே பரவிப் பண்ணையிலுள்ள கோழிகள் முழுவதும் நோயின் காரணமாகப் பண்ணைக்காரரின் அஜாக்கிரதையினால் விரைவில் அழிந்துவிடக்கூடும். வாத்துகளுக்கு நோய்களே இல்லை. வாத்து வளர்ப்போரைக் கேட்டால் அவர்கள் இதைக் கூறுவார்கள். கோழிகளுக்கு ஆரோக்கியமுள்ள வீடுகள் அவசியம். அவ்வீடுகளில் அவைகளை விஸ்தாரமாக வைக்கவேண்டும். நடமாடும் இடமும் அவசியம். செலவுகள் வளர்ந்துவிடும். குள்ள வாத்துகளுக்கு இவையொன்றும் வேண்டுவதில்லை. நீர்நிலைகளின் சூழ்வில் இவை காலம் போக்குகின்றன. இவைகளுக்கு மேய்ச்சல் நிலம் நீர்நிலைகளும் அறுவடையான நிலங்களுமே. இரவில் திறந்த வெளிகளில் குள்ள வாத்துகளை நெருக்கமாக அடைத்து வைக்கலாம். கோழி இறைச்சி வேண்டுமானால் குஞ்சுகள் குறைந்த பட்சம் ஐந்து மாத வளர்ச்சியாவது அடைந்திருக்கிற வரையில் காத்திருக்க வேண்டும். மூன்று அல்லது மூன்றரை மாதத்து வாத்துக் குஞ்சுகளின் இறைச்சி தின்பதற்கு ஏற்றதாகிவிடுகிறதாம். இறைச்சியின் பொருட்டு வளர்ப்போருக்கு வாத்துகள் சிக்கன முறைக்கு ஏற்றவை ஆகின்றன. குள்ள வாத்து வருஷத்தில் ஒரு கோழி தரக்கூடியது போல் இரண்டு பங்கு முட்டைகளை உதவு

கின்றது. நாட்டுக் கோழி ஒன்று 70 முதல் 100 முட்டைகளைத் தருமானால் ஒரு குள்ள வாத்து, சுமார் 150 முதல் 180 முட்டைகளைத் தரக்கூடும். நியூஸி லாந்தில் ஒரு வாத்து ஓராண்டில் 363 முட்டைகளைத் தந்ததாம்! இது நமக்கு நம்பத் தக்க விஷயமாகக் கூடத் தோன்றவில்லை. ஆயினும் இது உண்மையே. அடை காக்கும் இயல்புடைய பறவைகள் குறை வாகவே முட்டையிடும். நாட்டுக் கோழி அடை காக் கும் இனத்தது. அதனால் அது குறைவாகவே முட்டை இடுகிறது. குள்ள வாத்து அடை காப்ப தில்லை. ஆகவே, அதனிடம் அதிகமான முட்டை களைப் பெறமுடியும்.

பண்ணைகளுக்குக் குள்ள வாத்து வளர்ப்பால் ஏற்படும் அநுகூலங்கள் பல. குள்ள வாத்துகளின் எருவினால் நிலம் வளம்படுகிறது. பூச்சிகளைக் குள்ள வாத்துகள் அறவே ஒழித்துவிடுகின்றன. குள்ள வாத்துகள் வாழுமிடங்களில் புழு பூச்சிகள் இருக்க மாட்டா. ஈரப்பிரதேசங்களில் ஆடு மாடுகளுக்கு நத்தைகளின் வழியாகக் குடற் புழுக்கள் உற்பத்தி யாகின்றன. குள்ள வாத்துகள் இருக்குமிடங்களில் கால் நடைகளுக்கு இந்த நோய் இருப்பதில்லை.

குள்ள வாத்துகளை வளர்ப்பதற்குப் பழக்கமோ திறமையோ அவசியம் இல்லை. எவரும் நூலறி வைக் கொண்டு 100 அல்லது 120 குள்ள வாத்து களை எளிதில் வளர்க்க முடியும்.

## இயல்புகள்

குள்ள வாத்து ஜலத்தை மிகுதியாக விரும்பும் பறவை. குளம் குட்டைகளைக் கண்டால் அதற்கு ஆனந்தம். ஓடும் நீரைக் கண்டுவிட்டால் அதன்

மகிழ்ச்சிக்கு அளவே இராது. நீந்துவதில் அது சலிப்பதே இல்லை. ஆணும் பெண்ணும் காதலித்துக் கொஞ்சும் இடமும் நீர்நிலைகளே.

தண்ணீரில் இருக்க விரும்பும் இப்பறவைக்குக் குடிநீர் அதிகமாக வேண்டும். அது மிகவும் குளிர்ந்தே இருக்க வேண்டும். உணவை உட்கொள்ளும்போது ஒரு வாய் உணவு, ஒரு வாய் ஜலம் வீதம் மாற்றி மாற்றி உட்கொள்ளும்.

நீர்நிலைகளின் கரைகள் சரிவாக இருக்கும் அல்லவா? சரிவு நிலங்களில் ஏறுவதும் இறங்குவதும் குள்ள வாத்துகளுக்கு விளையாட்டுப் பொழுது போக்காகும். வெயில் மட்டமாக உள்ள நேரங்களில் அவை ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு இந்த விளையாட்டை மேற்கொள்வதை நாம் பார்க்கலாம்.

குள்ள வாத்துகள் கூட்டங் கூட்டமாகக் கூடி வாழும் இயல்பின. கூட்டத்தை விட்டுப் பிரிந்து போக எதுவும் சம்மதியாது. நாம் ஒன்றை வலிதில் பிரித்து வைத்தால் அதனிடம் அமைதியே இராது. இனப் பற்று அதனிடம் இருப்பதனால் ஓர் ஆள் 100 அல்லது 150 குள்ள வாத்துகளைத் தனியாகச் சமாளித்தல் எளிது. மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வதும் அப்படியே. பிரயாணத்தின்போது நீண்ட ஒரு மூங்கிலை வைத்துக்கொண்டு ஒதுக்குப் புறமாகச் செல்லும்படி ஜாடை காட்டினால், கட்டளைக்குப் பணிந்து அவை அங்ஙனமே நடந்துகொள்ளும்.

குள்ள வாத்து மிகவும் சாந்தமானது. மென்மையான மனமுடையது. கடுங்குரலைக் கேட்டால் கூட அஞ்சக் கூடியது. அதனை எவரும் பயமுறுத்

தல் கூடாது. அச்சுறுத்தினுல் அது நன்கு வளர்வதில்லை; முட்டையிடும் சக்தியும் குறைந்து போகிறது. நம் நாட்டில் குள்ள வாத்து வளர்ப்போர் இந்த ரகசியத்தை அறிந்திருக்கிருர்கள்.

வயது முதிர்ந்த ஒரு கிழவன் சுமார் 100 குள்ள வாத்துகளை மேய்த்து வந்தான். "இத்தனையும் கவனித்துக்கொள்ள இந்த வயதில் உன்னுல் முடிகிறதா?" என்று நான் அவனைக் கேட்டேன். அதற்கு அவன், "நாம் அவைகளை எதற்காகக் கவனிக்க வேண்டும்! அவைகளே தம்மைச் சரிவரக் கவனித்துக்கொள்ளும்போது நமக்குக் கவலை வேண்டுவதில்லை" என்ருன். பிறகு அவன், "நீங்கள் ஒரு வாத்தை வெருட்டினுல் போச்சு; உடனே கூட்டத்திலுள்ள எல்லாப் பறவைகளும் சஞ்சலங்கொண்டு குவா குவா என்று கத்திப் பரபரப்பை உண்டு பண்ணும். கூட்டத்தின் அமைதி அடியோடு குலைந்துவிடும். அப்பொழுதுதான் அத்தனை பறவைகளையும் சமாளிப்பது நமக்குக் கஷ்டமாகி விடுகிறது" என்று சொன்ருன்.

"ஒன்று மாதிரியே எல்லாம் இருக்கின்றனவே! ஒரு வயலில் பலருடைய கூட்டங்கள் கலந்து மேயும்போது கலப்பு ஏற்பட்டு விடாதா? மாலையில் வீட்டுக்கு ஓட்டும்போது எது எவருடையது என்று நீங்கள் எப்படி அறிந்துகொள்ளுகிறீர்கள்?" என்று நான் கேட்டேன். அதற்கு அவன், "நாங்கள் அறிந்துகொள்ள ஏன் பிரயாசைப் பட வேண்டும்! அது அது தானுகவே பிரிந்து தன் கூட்டத்துக்கு வந்துவிடும். கூட்ட அபிமானம் அவைகளிடம் அதிகமாகவே இருக்கிறது. நாம் கோலை

நீட்டி, 'ஒன்ருகச் சேருங்கள்' என்று ஜாடை காட்டுவதுதான் தாமதம்; உடனே அவை குறிப்பை அறிந்துகொண்டு தனித்தனிக் கூட்டமாகப் பிரிந்து விடும்'' என்ருன். குள்ள வாத்துகளிடம் இந்தக் கூட்ட அபிமானம் இருந்தாலும் பல கூட்டங்களை ஒன்ருக நடத்திச்செல்பவர்கள் தங்கள் தங்கள் கூட்டங்களைச் சேர்ந்த குள்ளவாத்துகளுக்கு அலகிலோ அல்லது கால் விரல்களுக்கு இடையிலுள்ள சதையிலோ ஒவ்வொரு வித அடையாளம் செய்து வைக்கிருர்கள். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த எல்லா வாத்துகளுக்கும் ஒரே அடையாளந்தான் இருக்கும்.

அவன் நல்லவனுக இருப்பதைக் கண்டு மேலும் சில செய்திகளை அறிந்துகொள்ள விரும்பி, ''நான் ஒரு வாத்தைத் தூக்கிப் பார்க்கலாமா?'' என்றேன். அதற்கு அவன், ''உங்களுக்குப் பழக்கம் வேண்டுமே; உங்கள் கைக்கு அது அகப்படாது!'' என்ருன்.

''இல்லை, நான் கோழிகளைத் தூக்கித் தூக்கிப் பழகினவன். ஒரு வாத்தை நிதானமாகத் தூக்கிப் பார்க்கிறேனே'' என்றேன்.

பிறகு அவன் குனிந்து, நடந்துகொண்டிருந்த ஒரு குள்ள வாத்தின் கழுத்தைப் பிடித்து நிறுத்தினுன். பிறகு சிறகுகளின் அடியில் கைபோட்டுச் சிறகுகளைப் பிடித்துத் தூக்கி, ''நடக்கிற வாத்தைக் கழுத்தைப் பிடித்து நிறுத்தவேண்டும்; நிற்கிற வாத்தை இறக்கைகளைப் பிடித்து எடுக்க வேண்டும்; கோழிகளைப் பிடிக்கிற மாதிரி செய்யக்கூடாது; கால்களில் இவைகளுக்கு வலிவில்லை'' என்ருன்.

அவன் பழைய முறையில் அநுபவம் பெற்றவன். அவனைப் பார்த்துப் பழகியபின் என் மனத்தில் ஓர் எண்ணம் உறுதியாயிற்று. 'வாத்தினங்களைச் சுதாரிக்க இளைஞரைவிட வயது முதிர்ந்தவர்களே அவசியம்; முதியவர்களிடமே நிதானம், பொறுமை, அபிமானம் முதலிய வளர்ப்புக் குணங்கள் அமைந்திருக்கின்றன' என்பது என் கருத்து. இரண்டு நாள் அவனுடன் இருந்து நான் குள்ள வாத்து வளர்ப்பு விஷயமாகப் பலவற்றை நேரிற் கண்டும் அவன் சொல்லக் கேட்டும் தெரிந்துகொண்டேன்.

குள்ள வாத்துகள் காலையில் வெயில் ஏறுவதற்கு முன்பும் மாலையில் வெயில் மறைந்த பிறகும் முட்டை இடுகின்றன. வெயில் வேளைகளில் அவை பெரும்பாலும் முட்டை இடுவதே இல்லை. ஆகவே, மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்கிறவர் காலை 9 மணிக்கு மேல் ஓட்டிச் சென்று மாலை $5\frac{1}{2}$ மணிக்குள் வீட்டுக்குத் திரும்பிவிட வேண்டும். மாலையில் நேரம் கழித்து ஓட்டிவருவதானால் வழியிலேயே சில குள்ள வாத்துகள் முட்டையிட்டு விடுகின்றன. முட்டையிடுவதற்கு மறைவான ஓரிடத்திற்குச் செல்லவேண்டும் என்ற உணர்ச்சி கோழிகளிடம் இருப்பதுபோல் குள்ள வாத்துகளிடம் அமையவில்லை.

குள்ள வாத்துகள் மிகுதியாக முட்டைகளைத் தருவதனால் விரைவில் தளர்ச்சியடைந்து 3 வருஷங்களில் இறந்து விடுகின்றன.

வாத்தினப் பறவைகளிடம் அடை காக்கும் தன்மையோ, குஞ்சுகளை வளர்க்கும் அபிமானமோ எள்ளளவும் இல்லை. வாத்து முட்டைகளைக் கோழியிடந்தான் அடை காக்க ஒப்படைக்க வேண்டும்.

வாத்துக் குஞ்சுகளைக் கோழிதான் காப்பாற்றி வளர்க்கவேண்டும்.

வருஷத்தில் சில மாதங்களில் பகல் நேரம் அதிகம்; மற்றும் சில மாதங்களில் இரவு நேரம் அதிகம். தை முதல் ஆடி வரையில் பகல் அதிகமாகிக்கொண்டு வரும். ஆவணியிலிருந்து மார்கழி முடியப் பகல் குறைந்துகொண்டே போகும். வெளிச்சம் அதிகமாக இருக்கும் (பகல் அதிகமாக உள்ள) மாதங்களிலேயே சூழ்நிலை ஒத்திருந்தால் வாத்துகள் மிகுதியாக முட்டையிடுகின்றன. வெளிச்சத்துக்கும் வாத்து முட்டையிடும் சக்திக்கும் ஏதோ தொடர்பு இருக்கவேண்டும் என்பதை இதனால் ஊகிக்க முடிகிறது. மேல்நாட்டார் இந்த நுட்பத்தை அறிந்துகொண்டு குள்ள வாத்துகளை இரவில் அடைக்கும் இடத்தில் மின்சார விளக்கை ஏற்றி வைக்கிறார்கள். இரவில் விளக்கின் ஒளி இருந்து வருவதால் வாத்துகளின் முட்டையிடும் சக்தி அதிகமாகிறது. நம் நாட்டில் மின்சாரம் இல்லாத இடங்களில் வாத்துகளை அடைக்கும்போது லாந்தர் விளக்குகளை ஏற்றிவைக்கலாம்.

காற்று அதிகமாக வீசும்போது குள்ள வாத்துகள் வருந்துகின்றன. காற்று மிகுதியாக வீசும் வைகாசி பிற்பாதி முதல் ஆடி முடிய அவை சரிவர வளர்வதில்லை. முட்டையிடும் சக்தியும் குறைந்து போகிறது. நம் நாட்டில் பல இடங்களில் இந்த மாதங்களில் இடத்தின் சூழ்நிலை அவைகளுக்கு மாறாக இருக்கிறது. கோடைக் காலத்தில் மாலை நேரங்களில் திடீரென்று பெருஞ் சூறைக்காற்று வருவதுண்டு. அவை வருவது நமக்கு முன்னதாகத்

தெரியாது. வாத்து முதலிய கோழி இனப் பறவைகள் இதை எப்படியோ சூட்சுமமாகத் தெரிந்து கொண்டு விடுகின்றன. சூறைக்காற்று வரும் என்று கண்டால் கூட்டத்தில் ஒரே பரபரப்பு; ஒரே இரைச்சல்! எல்லா வாத்துகளும் நெருக்கமாக ஒன்று சேர்ந்து மறைவிடத்தைத் தேட அச்சமயம் முயலுகின்றன. இந்த இயல்பை அறிந்து நாம் குள்ள வாத்துகளை அடைக்கும் இடத்தில் சரியானபடி காற்றடைப்பு முறைகளைக் கையாள வேண்டும்.

மேலே கூறியவை எல்லாம் குள்ள வாத்திணிடம் காணப்படும் சில இயல்புகளாகும்.

## வளர்ப்புக்கு ஏற்ற இடம்

குள்ள வாத்து வளர்ப்பு எவருக்கும் லாபம் தரும் தொழிலாக இருந்தாலும், எல்லாருக்கும் அந்த வளர்ப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்படாது. இட வசதி என்பது எங்கும் ஒரு மாதிரியாக இல்லை. குள்ள வாத்துகளுக்கு ஜல வசதி இருக்கவேண்டும். ஓடுநீர் நல்லது. அது இல்லையேல் ஏரியோ, குளம் குட்டையோ அவசியம். ஜலம் உப்பாக இருக்கக் கூடாது. குள்ள வாத்து வளர்ப்புக்கு உப்பு நீர் பிரதிகூலமானது.

குள்ள வாத்து வளர்ப்புக்குத் தோப்பும் துறவும் சோலையும் காவும் நிறைந்திருக்கிற இடம் யோக்கியமானது. கடும்வெயிலின் வெம்மை தோன்றும் மேட்டு நிலங்கள் பிரயோசனம் இல்லை. களிநிலத்தைவிட ஈரந் தாங்கும் கலப்புமண் பூமியே சிலாக்கியமானது.

நிலத்தில் புல் பூண்டுகள் மிகுதியாக இருந்தால் குள்ள வாத்துகள் அவற்றைத் தின்று செழிக்கின்றன. நன்செய் நிலங்களில் நீர் நிலைகளுக்கு அரு

கில் புல் பூண்டுகள் இருப்பதனுல் அங்கே குள்ள வாத்துகள் விருத்தியாகின்றன. புல் பூண்டு இல் லாத இடங்களில் நடமாடும் இடத்தைப் புல் தரை யாக்கி வைக்க வேண்டும்.

காற்றுப் பிரதேசங்களில் குள்ள வாத்துகள் நிலே கொள்வதில்லே. அத்தகைய இடங்களில் இவை களுக்குக் காற்றடைப்பு வேலிகள் அவசியம்.


பண்ணேகளில் குள்ள வாத்துகளே வளர்க்க விரும்புகிறவர்கள் தங்கள் பண்ணேயில் பள்ளமான இடத்தில் ஒரு குட்டையை அமைத்துக்கொண்டு மழைக்காலத்தில் அதில் நீரைத் தேக்கிக்கொள்ள வேண்டும். குட்டையைச் சுற்றிலும் நிழல் தரும் மரங்களே நெருக்கமாக வளர்த்துக் கிளர்ச்சியுள்ள சூழலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குட்டை பெரியதாக இருந்தால் அதில் கருவேல மரங்களே நட்டு நீராவி விரைவில் வெளியேருமல் ஜலத்தை நீண்டநாள் வரையில் காப்பாற்றி வைக்கலாம்.

மேலே கூறிய வசதிகளே யோசித்துக்கொண்டு ஒருவர் வாத்து வளர்ப்பதைத் தொடங்கினுல் வளர்ப் பில் லாபம் மேலும் மேலும் ஓங்குதல் நிச்சயம்.

## அடைக்கும் இடம்

கோழிகளுக்கு வீட்டுவசதி நன்ருக அமைந் திருக்க வேண்டும். வாத்துகளுக்கு அது தேவை யில்லே. திறந்த வெளியில்கூட அவைகளே அடைக் கலாம். ஆனுல் வெயில் படக்கூடாது. நரிகள், நாய்கள் நுழையாதபடி வேலி போட்டுப்

பத்திரப்படுத்திய தோப்பு ஒன்று இருந்தால் அதில் குள்ள வாத்துகளை வைக்கலாம். காற்றோட்டம் மிகுதியாக உள்ளதும் மூங்கில் தட்டிகளே சுவர்களாக அமைந்ததுமான ஒரு குடிசை போதுமானது. வயது வந்த ஒன்றுக்கு 3 சதுர அடி வீதம் நம்மிடமுள்ள குள்ள வாத்துகளுக்கு ஏற்ற விஸ்தீரணம் இருக்க வேண்டும்.



குஞ்சுகளைக் கவித்து வைக்கும் பஞ்சரக் கூடை

குடிசைக்குப் பக்கத்தில் நிலப்பரப்பு இருந்தால் அதில் மரங்களை உண்டுபண்ணி, பகல் வேளைகளில் குள்ள வாத்துகள் நடமாடும் இடமாக அதனை மாற்ற வேண்டும்.

குஞ்சுகளையும் வயது வந்தவற்றையும் ஒன்றாக ஓர் அடைப்பிலேயே வைக்கக்கூடாது. அப்படி வைக்கும் அவசியம் ஏற்பட்டால் குஞ்சுகளை அங்கே தனியாகப் பஞ்சரக் கூடையில் வைக்கவேண்டும்.

## குள்ள வாத்து இனங்கள்


குள்ள வாத்துகளில் முட்டை இனம், இறைச்சி இனம் என இரு வகைகள் இருக்கின்றன. முன்னவை கனமற்றவை; இந்த இனத்தில் ஒவ்வொன்றும் சராசரி $3\frac{1}{2}$ முதல் $4\frac{1}{2}$ ராத்தல் எடை இருக்கும்; ஆனால் அதிகமாக முட்டை இடும். இறைச்சி இனங்கள் கனமான பறவைகள்; ஒன்றன் சராசரி எடை

5 முதல் 7 ராத்தல் ஆகும். இவைகள் அதிகமாக முட்டைகளை இடமாட்டா. முட்டை இனம் ஒன்று ஒரு வருஷத்தில் 180 முட்டை இட்டால் இறைச்சி இனப் பறவை 100 முட்டைகள்தான் இடக்கூடும்.

நம் நாட்டில் உள்ள குள்ள வாத்துகளை மேலே கூறியபடி இறைச்சி அல்லது முட்டை இனங்களாகப் பிரிக்க முடியாது. வளர்ப்புமுறை விஞ்ஞான ரீதியில் அமையாததனுல் இனப்பிரிவு கூற முடியாது. ஆனுல் குள்ள வாத்துகளை நன்கு போஷித்து வந்தால் இரண்டு தலைமுறைகளில் நல்ல இனங்களை உண்டாக்கிவிடலாம்.

அந்நிய நாடுகளில் உள்ள இந்த இனங்களைப்பற்றி ஆராய்வோம்.


## முட்டை இனங்கள்



இண்டியன் ரன்னர்

இண்டியன் ரன்னர் (Indian Runner): இது செங்குத்தான உடலையுடையது. வெள்ளை நிறம் உள்ளது. பார்ப்பதற்கு அழகாக இராது. ஆனுல் குள்ள வாத்தினங்கள் எல்லாவற்றிலும் அதிகமான முட்டைகளைத் தரக்கூடியது. இதன் கனம் 4 ராத்தலுக்கு மேல் இராது. அதனுல் இறைச்சி அதிகம் இல்லை. இப்பறவைக்குத் தாயகம் இந்தியா,

மலேயா முதலியவை. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இந்த இனம் பெருவாரியாக விருத்தி செய்யப்பட்டிருக்கிறது. நியூஸிலாந்தில் இந்த இனப் பறவையொன்று வருஷம் ஒன்றில் 363 முட்டைகளை இட்டதாம்!




காகி கேம்ப்பெல்

பறவை உலகிலேயே இக் கணக்குத்தான் உச்ச அளவாகும். காகி கேம்ப்பெல்(Khaki Campbell), கால் (Call), பவ்ப் (Buff), க்ரெஸ்லெட் (Creslad), ஈஸ்ட் இண்டியன் (East Indian) என்பனவும் முட்டை இனங்களே.

## இறைச்சி இனங்கள்

பீகின் (Pekin): இதற்கு உடல் நீளமாகவும் கனமாகவும் இருக்கும். வெள்ளை வெளேரென்றிருக்கும். மார்பு அகலமானது. மூக்கும் கால்களும் ஆரஞ்சு நிறமுள்ளவை. பார்வைக்கு அழகாகத் தோன்றும். இதன் எடை 7 முதல் 9 ராத்தல் வரை இருக்கும். இதற்குத் தாயகம் சீனு. இப்பொழுது இது அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்


பாவிலுள்ள மற்ற நாடுகள் முதல் உலகின் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது.



ஐலெஸ்பரி

ஐலெஸ்பரி(Aylesbury): விஞ்ஞான முறையில் வளர்ப்பு எங்கெங்கே பரவி யிருக்கின்றதோ அங்கங்கே இது காணப் படுகின்றது. இதுவும் சீனப் பறவையைப் போல் வெண்ணிறமுள் ளது. ஆனல் இதன் அலகு பவளம் போ லும் மாமிசம் போலும் சிவப்பாக இருக்கும், கால்கள் ஆரஞ்சு நிறமுள் ளவை. இதன் எடை 7 முதல் 9 ராத்தலாகும்.

மேலே கூறிய பறவை களில் நமக்கு இஷ்ட மான இனத்தை நாம் வளர்க்கவேண்டும். ஒருவர் ஓரினத்தை வளர்ப்பது தான் நல்லது. இரண்டு மூன்றினங்களை வளர்ப் பார்களானல் அவைக ளுள் ஜாதிக் கலப்பு ஏற் பட்டு இன நாசம் வந்து விடும்.



பீகின்

## உணவு வகை

நீர் நிலைகளுக்கருகில் மேயும் பிராணியாதல் பற்றிக் குள்ள வாத்து நீரில் உள்ள பிராணிகளாகிய பூச்சிகள், தவளை, நத்தை, நீர்ப்பூண்டுகள் முதலிய வற்றை உட்கொள்ளுகின்றது. இதன் சிறந்த உணவு இவையே. இவற்ரோடு அறுவடையான வயல்களில் சிந்திக் கிடக்கும் நெல்மணிகளையும் அங்கேயுள்ள கறையானையும் இது தானகத் தேடிக் கொள்ளுகிறது.

குள்ள வாத்துக்குச் சுண்ணும்புச்சத்து மிகவும் அவசியம். எலும்புகள் வலுவாதற்கும் அது இடும் முட்டைகளின் ஓடு உறுதியாக இருப்பதற்கும் இந்தச் சுண்ணும்புச் சத்து மிகவும் இன்றியமை யாதது. வயற்புறங்களில் கிடக்கும் நத்தைகளின் ஓடுகள், கிளிஞ்சில்கள் (Shells) முதலியவற்றில் சுண்ணும்பு மிகுதியாக இருக்கிறது. இவைகளைக் குள்ள வாத்து அடிக்கடி உட்கொள்ளும். நாம் கிளிஞ்சிலைக் கொண்டு வந்து தூள்செய்து குள்ள வாத்துகளுக்கு முன் வைத்துவிடவேண்டும். சுக் கான் கற்களைப் பொடி செய்தும் வைக்கலாம். முட்டையிடும் எந்தப் பிராணிக்கும் இது அவசியம் என்பதை மறக்கக் கூடாது.

மேய்ச்சலில் கிடைக்கும் உணவு குள்ள வாத்து களுக்குப் பற்ருமல் இருக்கலாம். அதனுல் வீடுகளில் அவைகளுக்குச் சிறிதளவு உணவு கொடுத்தல் அவசியமாகும். ஊற வைத்த ஈரத் தவிடு, ஊற வைத்த தானியங்கள், சமைத்த சோறு இவைகளை வீட்டில் தரவேண்டும்.

உண்ட உணவு ஜீரணமாவதற்காகக் குள்ள வாத்து மணல், கரித்தூள் இவைகளைத் தின்னக் கூடும். ஜீரணித்தபின் மணலும் கரியும் வெளியே மலத்துடன் வந்துவிடும். இந்த இயல்பை எண்ணி நாம் அதற்குத் தவிட்டை உணவாக வைக்கும் போது அதனுடன் சிறிதளவு மணலைச் சேர்த்துக் கொடுக்கவேண்டும். மணலின் கலப்பு 100 - இல் 8 முதல் 10 பங்காக இருக்கலாம்.

மேய்ச்சலில் புல்பூண்டு முதலிய பச்சை உணவு குள்ள வாத்துக்குக் கிடைக்காவிட்டால் அவை களைப் பறித்து வந்து கொடுத்தல் அவசியம். பச்சை உணவுடன் வெங்காயத்தின் தளிர்கள் முள்ளங்கி, வெங்காயம் இவற்றின் துண்டுகள் முத லியவற்றையும் தரவேண்டும். வெங்காயத்தில் ஊன் பொருள் மிகுதியாக இருக்கிறது.

குள்ள வாத்து ஒருவாய் உணவுடன் ஒரு வாய் ஜலத்தையும் உட்கொள்ளும் இயல்பினது. அத னால் உணவு கொள்ளும்போது அதனிடம் சுத்த மான குளிர்ந்த ஜலம் இருக்க வேண்டும். நீர் எவ் வளவுக்கெவ்வளவு ஜில்லென்றிருக்கிறதோ அவ் வளவுக்கவ்வளவு குள்ள வாத்துகள் மகிழ்ச்சியடை கின்றன.

அவைகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும் போது காலையில் ஒரு முறை (வீட்டுக்குள் அல்லா மல்) நடமாடும் இடத்திலாவது முற்றத்திலாவது உணவு கொடுக்க வேண்டும். மேய்ச்சலிலிருந்து அவை திரும்பியபிறகு மறுபடியும் ஒரு முறை மாலை

யில் உணவு கொடுக்க வேண்டும். இந்த இரண்டு வேளை உணவு போதும். மேய்ச்சல் சரிவர இருந்தால் மிகச் சிறிய அளவில் உணவு கொடுத்தல் போதும்.

குஞ்சுகளின் உணவைப்பற்றிக் குஞ்சு வளர்ப்பில் கூறுவோம்.

## இனம் சேர்த்தல்

குள்ள வாத்துகளில் ஆண், பெண் இனங்களைக் கண்டறிவது எளிதன்று. வயது வந்த பறவைகளுள் ஆண்களுக்கு வால் இறகுகள் அதிகமாக முளைத்திருக்கும். வாத்து முதலிய கோழி இனப் பறவைகளில் பேடைகளைவிட ஆண் பறவைகளுக்கே இறைவன் பலமான குரலை அமைத்திருக்கிறான். பலத்த குரலைக் கண்டுகொண்டும் வால் இறகுகளைப் பார்த்தும் நாம் குள்ள வாத்துச் சேவல்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். குஞ்சுகளாக இருக்கும்போது அறிவது கஷ்டமே.

ஆண் பறவை ஒன்று ஐந்து அல்லது ஆறு பெண் பறவைகளுக்குக் கர்ப்பம் வழங்கக் கூடும். அது ஐந்தாறு பேடைகளுடன் தன் ஆயுள் முழுவதும் உறவு கொள்கிறதென்று சிலர் கூறுகிறார்கள். ஆணும் பெண்ணும் ஒன்று சேர்வது நீரில்தான். ஜலக்கிரீடை என்பது அன்னம் முதலிய நீர்ப்பறவைக்கெல்லாம் ஏற்ற போக முறை.

நல்ல ஜாதியைச் சேர்ந்த குள்ள வாத்துச் சேவல்களைக் கொண்டு உள்நாட்டு இனங்களை விருத்தி செய்துகொள்வது நல்லதுதான். ஆனால்

பயிற்சியில்லாத சாதாரண மக்களுக்கு இது சாத்திய மாகாது. அவர்கள் ஓரினப்பறவைகளையே வளர்ப் பது நல்லது. நல்ல போஷாக்கின் மூலம் நாம் உள் நாட்டு இனங்களின் முட்டையிடும் தன்மையையும் இறைச்சியின் தன்மையையும் உயர்த்த முடியும். கன மூள்ள பெரிய குள்ள வாத்துகளை வேறு பிரித்து இறைச்சி இனங்களாக மாற்றும் பொருட்டுக் கொழுக்கத் தக்க உணவு வகைகளைக் கொடுக்கலாம். ஊற வைத்த பயறுவகைகள் குள்ளவாத்துகளைக் கொழுக்கச் செய்யும். கனமற்ற சிறிய பறவைகளை வேறாக வைத்து முட்டை இனங்களாக மாற்றலாம். இவைகளுக்கு மேலே கூறிய பயறுவகை உணவு அவசியமில்லை; தானியங்களே போதும். வெண்ணெய் எடுத்த பால், புளிப்படையாத மோர், வெங்காயத் துண்டுகள், தவிடு இவைகளே முட்டை இனத்துக்கு ஏற்ற ஆகாரம்.


குள்ள வாத்துகளை வளர்ப்போர் மேலே கூறிய படி இனப்பிரிவை விருத்தி செய்யலாமே யொழிய நல்ல ஆண் குள்ள வாத்துகளைக் கொண்டு நம் கூட் டத்தை விருத்தி செய்யலாம் என்று சிந்தனை செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

## அடை காப்பு

குள்ள வாத்தினிடம் தாய்மைக் குணம் இல்லை. அது தன் முட்டைகளை அடை காப்பதில்லை. குஞ்சு களையும் வளர்ப்பதில்லை. அதன் முட்டைகளைக் கோழிகளே அடைகாத்து, முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வந்ததும் அவைகளை வளர்த்து வருகின் றன.

கோழி முட்டை வெடித்துக் குஞ்சு வெளி வருவதற்கு, கோழி 21 நாள் அதை அடை காக்க வேண்டும். வாத்து முட்டைகள் 28 நாள் அடையில் இருந்தால்தான் குஞ்சுகள் வெளி வரக்கூடும். ஒரு பெட்டைக்கோழி 8 முதல் 10 வாத்து முட்டைகளை அணைத்து அடை காக்கக்கூடும்.

மூன்று நாளுக்கு மேற்பட்ட முட்டைகளை அடையில் வைத்தால் அவை கெட்டுப் போகின்றன. ஆகையால் குள்ள வாத்து முட்டைகளைக் குளிர்ந்த இடத்தில் வைத்திருந்து இரண்டு நாளுக்குள் அடையில் வைத்துவிட வேண்டும்.



சிக்கனமாகச் செய்துகொள்ளும்
அடைகாப்புப் பெட்டி

'கள்ளிப் பலகையைக் கொண்டு அடைகாக்கும் கூட்டை எளிதில் செய்துகொள்ளலாம். பெட்டி இரண்டடி சதுரம் இருக்கலாம். ஆழமும் இரண்டடி வேண்டும். இந்தப் பெட்டிக்குத் தாழுகை மூடிக் கொள்ளும் கதவு ஒன்றை இணைக்க வேண்டும். பெட்டியின் பக்கங்களிலும் கதவிலும் மேற்பாகத்

தில் காற்றோட்டத்தின் பொருட்டுச் சிறிய துளை களைச் செய்யவேண்டும். இந்தப் பெட்டியை நிறுத்தி ஓர் அறையைப் போலச் செய்துகொள் வதே அடைகாப்புக்கு ஏற்ற கூடாகும்.' *

அடைகாப்பு முறைகளின் விவரங்கள் 'கோழிப் பண்ணை' என்ற நூலுள் காணப்பெறு கின்றன.

குள்ள வாத்தின் முட்டைகள் பொரித்துக் குஞ்சுகள் வெளிவருவதற்கு 15-ஆம் நாள் முதல் 24-ஆம் நாள் வரையில் நீராவி கலந்த சூழ்நிலை கூட்டுக்கு அமைய வேண்டும். கூட்டுக்குள் மணலைப் போட்டு அதன்மேல் வைக்கோலைப் பரப்பிக் கூட்டை அமைத்திருந்தால் இந்த நாட்களில் மண லின்மீது குளிர்ந்த நீரைத் தெளிக்க வேண்டும். இதனால் நீராவியோடு கூடிய சூழ்நிலை அமைகிறது. 27-ஆம் தினமும் ஜலம் தெளித்து இதே சூழ் நிலையை உண்டுபண்ண வேண்டும்.

## குஞ்சு வளர்ப்பு

முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்ததும் அதற்கு 36 மணி நேரம் ஆகாரம் வேண்டுவதில்லை. வெளியே உள்ள அதிக உஷ்ணத்தையும் குளிரை யும் நாட் குஞ்சினால் (A day old duckling) தாங்க முடியாது. அதனைப் பத்திரமான இடத்தில் தாயின் அணைப்புக்குள் வைக்க வேண்டும்.

---

* இந்நூலாசிரியர் எழுதிய 'கோழிப்பண்ணை' என்ற நூலி லிருந்து எடுத்தது.

குஞ்சுகள் தாய்க் கோழியுடன் 3 வாரம் இருக்கலாம்; இந்தக் காலத்தில் வீட்டுக்குள்ளும் முற்றத்திலும் அவைகளை நடமாடவிடலாம். ஈரத்தரையிலோ ஈரமான புல்லிலோ இந்தப் பருவத்துக் குஞ்சுகள் நடமாடினல் அவை நோய்ப்பட்டு இறந்துவிடக்கூடும். குஞ்சுகள் இப்பருவத்தில் வெயிலையும் தாங்கமாட்டா.

மூன்று வார வளர்ச்சியடைந்த குஞ்சுகள் கோழியுடன் அல்லாமல் தாமாக வெளியே திரியலாம். புல் வெளிகளில் நடமாடலாம். ஆனல் ஆறுவது வாரம் வரையில் அவைகளை ஜலத்தில் விடக்கூடாது. தரையிலேயே இருக்கும்படி செய்யவேண்டும். ஐந்துவாரம் முடிந்துவிட்டால் குள்ள வாத்துகளுடன் இவைகளும் ஜலத்தில் நடமாடச் செல்லலாம்.

சிறிய குஞ்சு ஒன்றுக்கு ½ சதுர அடி இடம் வீதம் குஞ்சுகள் இருக்கும் அறையின் பரப்பு அமையவேண்டும். சிறிய கூடைகளில் குஞ்சுகளை விட்டு வைக்கிருர்கள். அவை வளர வளர இடத்தின் பரப்பையும் அதிகமாக்கிக்கொண்டே போகவேண்டும். முற்றும் வளர்ச்சியடைந்த குள்ள வாத்து ஒன்றுக்கு 3 சதுர அடி இடம் அவசியம்.

குஞ்சுகள் ஆகாரம் கொத்தும் பழக்கத்தைத் தாய்க்கோழி கற்றுக்கொடுக்கும். ஊறவைத்த குறுநொய், ஈரத்தவிடு, இளந்தளிர்கள், குளிர்ந்த நீர், சுண்ணும்புக் கற்களின் மிகமிகச் சிறிய பொடி, சோறு இவைகளைக் குஞ்சுகளுக்குத் தரலாம். ஆகாரத்தில் வேண்டிய அளவைக் குஞ்சுகள் தாமாக எடுத்துக்கொள்வதில்லை. அதனல் காலை ஒரு

முறையும் மாலையில் ஒரு முறையும் சோற்றை நன்றாகக் குழைத்து வைத்துக்கொண்டு நாமாக அவைகளுக்கு ஊட்டவேண்டும். முதல் வாரத்தில் 2 மணிக்கு ஒரு தடவை இரண்டு சிட்டிக்கையளவு சோற்றையோ, ஈரத் தவிட்டையோ தரவேண்டும். தவிட்டுடன் மீன் எண்ணெய், உப்பு, எலும்பு மா என்ற செயற்கை உணவு இவைகளைக் கலந்து தருவது நல்லது. ஒரு வேளைக்குக் குஞ்சுக்கு ஆறு சோற்றுப் பருக்கைக்குமேல் அவசியம் இல்லை.

குஞ்சுகளுக்கு அஜீரணத்தால் பேதியாவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பத்தில், சமையலுக்கு நாம் உபயோகப்படுத்தும் சோடாவில் ஒரு துளி எடுத்துக் குளிர்ந்த ஜலத்தில் கரைத்து அவைகளுக்குத் தந்தால் பேதி நின்றுவிடும்.

——

# 5. வாத்து

குள்ள வாத்துக்கும் வாத்துக்கும் தோற்றத்தில் அதிக வேறுபாடில்லை. வளர்ப்பு முறைகளிலும் அப்படியே. கோழியை வளர்ப்பதைவிடப் பொருள் சிக்கனத்துடன் குள்ள வாத்துகளை வளர்க்க முடியும் என்றோம். குள்ள வாத்து வளர்ப்பை விட வாத்து வளர்ப்பு இன்னும் சுலபமானது. இவைகளை நோய்கள் அணுகுவதில்லை என்பது மாத்திரம் அன்று; இவை தம்மைத் தாமே கவனித் துக் கொள்ளக்கூடும். வாத்தை முட்டைகளுக்காக வளர்ப்போர் எங்கும் காணும். இவைகள் இறைச் சிப் பறவைகளே. இறைச்சிக்காகவே இவைகளை வளர்க்கிறார்கள். நம்முடைய இருப்பிடம் பெரிய பங்களாவாக இருந்தால் அதில் செயற்கைக் குளம் ஒன்றை அமைத்து அழகுக்காக இந்தப் பறவைகளை வளர்க்கலாம். பண்ணைகளிலும் இந்த நோக்கத் தோடே வளர்க்கலாம். அன்னப் பறவையைப் போல் அழகை வழங்கும் பறவை இது.

இயல்புகள் : அன்னப் பறவையின் இயல்பு களைப்பற்றி இந்திய இலக்கியங்களில் விரிவாகக் காணலாம். அந்த இயல்புகளில் உயிர்நூற் புலவர் ஒப்புக்கொள்வனவும் உண்டு; கவிமரபாகப் பாராட்டிக் கூறப்படுவனவும் உண்டு. கவி மரபல் லாத சுபாவ குணங்கள் எல்லாம் வாத்தினிடம் அமைந்துள்ளன. வாத்து இயல்பாகப் பயந்த சுபா வம் உடையது. பேரொலியைக் கேட்டாலும், தனக் குப் பழக்கமில்லாத ஒன்றைக் கண்டாலும் அது நடு நடுங்கிவிடும். 'சுற்றுப் புறங்களில் என்ன நடக்

கிறது, யார் தங்கள்மேல் கண்ணுக இருக்கிருர்கள் என்று எப்பொழுதும் கவனித்தவண்ணமாகவே இப்பறவைகள் இருக்கின்றன. பல வாத்துகள் கூட்டமாக வளரும்போது தம்முள் ஒரு பறவையைத் தம் கூட்டத்துக்கு அவை காவலாக வைத்துக் கொள்ளும்' என்று உயிர்நூற் புலவர் சிலர் கவனித்து எழுதியிருக்கிருர்கள்.

இட அபிமானம்: வாத்து, தனக்குச் சம்பந்தப் பட்ட கூட்டத்தை மறப்பதே இல்லை. பூனையைப் போல் தான் வளரும் இடத்தின்மீது இதற்கு அபிமானம் அதிகம். புதிய இடத்துக்கு வாத்தை எடுத்துச் சென்ருல் அதன் அமைதி குலைகிறது. தன் இனத்தை எண்ணி எண்ணி உருகுவதை நாம் அறியலாம். புதிய இடத்தை அது ஏற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் பிடிக்கும்.

உணவு: புல், பூண்டு, இளந் தளிர்கள் முதலிய எதனையும் இப்பறவை விரும்பித் தின்னும். நமக்கு அரிசி முக்கிய உணவாக இருப்பதுபோல்—ஆகாரத்தில் அதிகமான பாகமாக இருப்பதுபோல்—வாத்துக்குப் பச்சைத் தீவனமே முக்கிய ஆகாரம். நாம் கறி, கூட்டு, குழம்பு, பால், முட்டை, பக்ஷணங்கள் முதலியவற்றைச் சேர்த்துக்கொள்வதுபோல் வாத்து புழு பூச்சிகள், அற்பத்தானியங்கள் முதலியவற்றை மிகச் சிறிய அளவில் உட்கொள்ளுகின்றது. ஆகவே வாத்துக்கு மேய்ச்சல் நிலம் அவசியம்.


உடல் வளர்ச்சி: ஆகாரம் அற்பமான புல் பூண்டு முதலியவையே என்ருலும் இப்பறவைகளுக்கு இளமையிலே வளர்ச்சி அதிகம். நம் நாட்

டில் வாத்தின் ஆயுள் உத்தேசமாக 10 அல்லது 12 வருஷங்களாகும். பிறந்த ஒரு வருஷத்தில் முழு வளர்ச்சியை எட்டிவிடுகிறது. முட்டையிலிருந்து வெளிவந்த 5 வாரத்தில் இதன் எடை சுமார் 4 ராத்தல் இருக்கும். 10 வாரத்தில் இதன் எடை 10 அல்லது 12 ராத்தலாக உயர்ந்துவிடும். முழுவளர்ச்சியடைந்த வாத்தின் எடை 18 ராத்தலாக இருக்கலாம். வேறு நாடுகளில் வாத்தை ஊட்டம் கொடுத்துக் கொழுக்க வைத்து விற்பவர்கள் நான்கு வாரக் குஞ்சுகளுக்குத் தொடர்ச்சியாக ஐந்து அல்லது ஆறு வாரம் நல்ல உணவைக் கொடுத்து வருகிறார்கள். அதனைப் பெறும் குஞ்சுகள் விரைவில் கொழு கொழுவென்று வளர்ந்து விடுகின்றன.

முட்டை இடும் இயல்பு: வாத்து ஆண்டு முழுதும் முட்டை இடுவதில்லை. மழைக் காலத்தை அடுத்து வரும் குளிர்காலத்திலும் முன் பனிக் காலத்திலும் இது சாதாரணமாக முட்டைகளை இடுகின்றது' வாத்து ஒன்று ஓர் ஆண்டில் உத்தேசமாக 40 அல்லது 50 முட்டைகளைத்தான் இடக்கூடும். ஒரு முட்டை, கோழி முட்டையைப் போன்று இரண்டு அல்லது இரண்டரைப் பங்கு பெரியது. கோழி முட்டையின் நிறை 2 அவுன்ஸ் என்றால் வாத்து முட்டை 6 அல்லது 7 அவுன்ஸ் நிறை இருக்கும்.

'கோழிக் குடும்பத்தில் மிகுந்த அசட்டுப் பறவை குள்ள வாத்துதான்; ஏனென்றால், அது கண்ட இடங்களில் எல்லாம் முட்டை இட்டுவிடும், என்று முன்பு கூறினோம். வாத்து அப்படி இல்லை; அது மானமுள்ளது. அது முட்டை இடுவதற்காக மறைவான இடம் ஒன்றைத் தேடிச் செல்லும். ஒரு

தடவை முட்டையிட்ட இடத்தையே அது பலதடவை யும் முட்டை யிடுவதற்கு நாடிவரும். வாத்தினிடம் இந்த இயல்பு இருப்பதனுல் முட்டையிடுவதற் கென்று அதற்கு நாம் மறைவான இடத்தில் ஒரு கூட்டைத் தயார் செய்து கொடுக்கவேண்டும். பெரிய பானை ஒன்று எடுத்து அதன் சரிவான பக்கத்தில் பெரிய துவாரம் செய்து பானையை நிலத்தில் கவிழ்த்துவிட்டால் உடைந்த அந்தப் பானை ஒரு கூடாய் விடும். மெத்தென் றிருப்பதற்கு அதில் வைக் கோலைத் திணித்து வைக்க வேண்டும். சிக்கன மான கூடு இதுதான்.



கோழி அடைகாக்கும் கூடு

வாத்தின் தெய்விகக் கற்பு: கற்பு நெறி வழுவாத பறவை இனத்தைச் சேர்ந்தது வாத்து. ஆண் வாத்து ஒன்று ஒரு பெண் வாத்துடன் மட்டும் உறவு கொள்ளும். இந்த உறவு அவைகளின் ஆயுள் பரியந்தம் மாறுவதே இல்லை. வேறு பெண் வாத்தை அந்த ஆண் வாத்து கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. பெண்ணும் அப்படியே. கூட்டாளி கள் ஆய்விட்ட இரண்டு பறவைகள் ஒன்றைவிட்டு மற்றென்று பிரிவதே இல்லை. சிறிது நேரப் பிரி வும் அவைகளைக் கவலைக்குள் ஆழ்த்தும். அவை களின் உறவு, லீலைகள் எல்லாம் நீர்நிலைகளில் தான்.

ஒரு பெண் வாத்துக்கு ஓர் ஆண் வாத்து வேண்டியிருப்பதனுல், ஏழெட்டுப் பெட்டைக் கோழி

களுக்கு ஒரு சேவல் வீதம் வைத்துக் கோழிகளை நாம் பெருக்குவது போல் வாத்துகளை விரைவில் விருத்தி செய்ய முடியாது. ஆகையால் ஒருவர் பெரிய வாத்து மந்தையை வைத்துக்கொள்ள முடியாது.

ஆண் பெண் அறிவு: குரலினால் அல்லாமல் ஆண் பெண் வேற்றுமையை நாம் அறிந்துகொள்ள முடியாது. சேவலின் குரல், நாட்டியப் பெண்கள் காலில் சதங்கை கட்டி ஆடும்போது எழுகின்ற இனிய ஓசையைப் போன்றது. அன்னப் பறவையின் குரலுக்குப் பெண்கள் காலில் அணியும் சிலம்பின் ஓசையை இலக்கியங்கள் உவமை காட்டும். ஆண் வாத்துக்கும் இந்த உவமை ஏற்கும். பெண் வாத்துக்கும் இந்த உவமை ஏற்கும். பெண் வாத்தின் குரல் மந்தமானது. ஈன சுரத்திலேயே அது கத்தும். கோழி இனப் பறவைகளிலேயே சேவல்களுக்குத்தான் பெரிய ஓசையைக் கடவுள் அமைத்திருக்கிறார். அழகும் அப்படியே.

## இனப் பெருக்கம்

அயல் நாடுகளில் சில வாத்தினங்கள் தம் முட்டைகளைத் தாமே அடைகாத்து வருகின்றன. முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டதும் அவைகளை வளர்த்து வருகின்றன. பலஜாதி வாத்துக்கள் அடைகாப்பதில்லை. அவைகளின் முட்டைகளைக் கோழியினிடமே அடைகாக்க ஒப்படைக்க வேண்டும். வாத்துக் குஞ்சுகளின் வளர்ப்புத் தாயும் பெட்டைக் கோழிதான்.

நாம் அமைத்துக் கொடுத்த வீட்டில் வாத்து முட்டையிட்டதும் நாம் அந்த முட்டையை எடுத்து வந்து குளிர்ச்சியுள்ள இடத்தில் பத்திரமாக வைக்க வேண்டும். இந்த நாட்டில் இரண்டு நாளுக்கு மேற்பட்ட முட்டை பொரிப்பதே இல்லை. முட்டை பெரிதாக இருப்பதனால் ஒரு பெட்டைக்கோழி 4 அல்லது 5 வாத்து முட்டைகளைத்தான் அடைகாத்தல் கூடும்.

வாத்து அது பிறந்த முதல் வருஷத்திலேயே முட்டையிடக்கூடும். ஆனால் அந்த முட்டைகளிலிருந்து குஞ்சுகள் தோன்றுவதில்லை. இரண்டு வருஷ வயதுடைய வாத்துகள் இடும் முட்டைகளையே நாம் அடையில் வைக்கவேண்டும்.


வாத்து முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட அவற்றைக் கோழி 28முதல் 31நாள் அடைகாக்கவேண்டும். சில ஜாதி வாத்துகளின் முட்டைகள் 28 நாளில் பொரித்துவிடும். வேறு இனங்களின் முட்டைகள் 29 முதல் 31 நாளில் பொரிக்கும். அடைகாப்பு, குஞ்சு வளர்ப்பு முறைகள் குள்ள வாத்துகளுக்கு உள்ளன போலவே. குள்ளவாத்து என்ற கட்டுரையில் அடைகாப்பு, குஞ்சுவளர்ப்பு என்ற தலைப்புக்களில் சொல்லியிருக்கும் விவரங்களைப் பார்க்க.

## வாத்து வகைகள்

வாத்துகளில் கனமுள்ளவை, கனமில்லாதவை என்று இரண்டு வகை உண்டு. கனமற்றவை வரு


ஷத்தில் 50 முட்டைகளுக்கு மேலும் தரக்கூடும். கனமுள்ளவை 40 முட்டைகளுக்கு மேல் தர மாட்டா. ஆனால் அவற்றின் இறைச்சி கனமாக இருக்கும். வாத்துகளில் சில இனங்களைப்பற்றி இங்கே கவனிப்போம்.

சீன வெள்ளை (White Chinese): இது கனமில்லாத வகையைச் சேர்ந்தது. நீண்ட செங்குத்தான (Upright) உடலை யுடையது. அலகும் கால்களும் ஆரஞ்சு நிறமாக இருக்கும். இதில் தவிட்டு நிற வகை ஒன்று உண்டு. அதன் கால்களும் அலகும் கருமையாக இருக்கும். சீனப் பறவையின் கனம் 10 ராத்தல் தான். இதன் முட்டை வேறு இனத்தைச் சேர்ந்த வாத்து முட்டைகளைவிடக் கனமானது. அதன் எடை சுமார் 7 அவுன்ஸ் ஆகும். இந்த ஜாதி வாத்து தன் முட்டைகளைத் தானே அடைகாக்கிறது. நம் நாட்டில் இது நன்றாக வளரக்கூடும். வளர்ப்புக்கு ஏற்றது.




சீன வெள்ளை

ஆப்பிரிக்கா இனம்: கனமுள்ள இனத்தைச் சேர்ந்தது இது. சாம்பல் நிறமுள்ளது. இதன் எடை 12 முதல் 18 ராத்தல் வரை இருக்கும்.


எம்ப்டென்

எம்ப்டென் (Embden) : இதன் நிறம் வெள்ளை. இங்கிலாந்தில் இந்த இனத்தை மிகுதியாக வளர்க்கிறார்கள். மிகப் பெரிய பிராணி இது. இதன் எடை 18 ராத்தல்.

டுலூஸ் (Toulouse): பிரெஞ்சு தேசத்தில் ஓர் ஊரின் பெயர் இது. அந்த ஊரில் இந்த இனத்தின் பெருக்கம் அதிகம்போலும். இப்பொழுது இந்த ஜாதி உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. இது சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தோடு காணப்படும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இதனை நன்றாக வளர்க்கிறார்கள். அங்கே இதன் எடை 20 முதல் 25 ராத்தலாகும்.


டுலூஸ்


நம் நாட்டில் மேலே கூறிய எல்லா இனங்களும் விருத்தியாகக் கூடும். இவைகளின் வளர்ப்பு முறை எளிதாக இருப்பினும் வளர்ப்போர் மிகக் குறைவு. வளர்ப்பதற்கு விஸ்தாரமாக இடம் இருக்கவேண்டும். ஜலவசதி வேண்டும். பங்களா

வில் செயற்கைக்குளம் ஒன்றை அமைத்து அதில் வளர்க்கலாம். வாத்துகளையும் குள்ளவாத்துகளையும் கலந்துவிடக்கூடாது. ஒன்றை வளர்ப்போர் மற்றொன்றை வளர்ப்பது உசிதமல்ல.

வளர்க்க விருப்பமுடையவர்களுக்கு நம் துரைத்தனத்தார் வாத்துகளையும் அவற்றின் பொரிக்கும் முட்டைகளையும் வாங்கித் தரவேண்டும். வீடுகளில் பங்களாத் தோட்டம் போடுகிறவர்கள் ஆறடி விட்டத்தில் ஒரு நீர்த்தொட்டியை அமைத்துக் கொண்டு அதில் வாத்துகளை வளர்க்கலாம். அன்னப் பறவைகள்போலச் சிங்காரத் தோட்டத்துக்கு வாத்துகள் காட்சியளிக்கக் கூடும்.

## 6. வான்கோழி

**கோ**ழிக் குடும்பத்தில் குள்ள வாத்தும் வாத்தும் நீரை விரும்பும் பறவைகள். குள்ள வாத்து அதிக நேரம் நீரில் இருக்க ஆசைகொண்டால் வாத்து சிறிது நேரமேனும் நீரில் இருக்க விரும்புகின்றது. வான்கோழியும் கினியாக் கோழியும் நீரை விரும்ப மாட்டா. கோழிகளைப் போல் இவை தரையில் வாழ்வன. குள்ள வாத்துக்கும் வாத்துக்கும் நோய்களே இல்லை என்று கூறலாம். வான்கோழிக்கோ கினியாக் கோழிக்கோ நோய்கள் அதிகம். கோழிக்கு வரும் எல்லா நோய்களும் இவைகளையும் பாதிக்கும். இக்காரணத்தினலே பெரிய அளவில் கோழிப்பண்ணையைவைத்து நடத்துகிறவர்கள் இந்த இரண்டு பறவைகளைப் பண்ணையில் அநுமதிக்கக் கூடாது. கோழிக்குடும்பத்தில் வான்கோழியும் கினியாவும் முட்டைகளுக்காக அல்லாமல் இறைச்சிக்காகவே வளர்க்கப்படுவன. வான்கோழியை ஆங்கிலத்தில் டர்க்கி (Turkey) என்பார்கள். நம்மவரில் பலரும் இதனை டர்க்கிக் கோழி என்பதுண்டு.



வான்கோழி

### வளர்ப்புக்கு ஏற்றவை

வான்கோழிகளில் பெரியவை, நடுத்தரமானவை, சிறியவை என மூன்று வகை உண்டு.

சிறிய இனமே வளர்ப்புக்கு யோக்கியமானது. நோய்களை எதிர்த்துப் போராடும் வன்மையும், சுறுசுறுப்பும் இதனிடமே காணப்படுகின்றன. 'இதன் இறைச்சியே சிறந்தது' என்கிறார்கள்.

கோழி இனப் பறவைகளை வாங்குவோர் அவற்றின் மார்பு அகன்று விரிவாக இருக்கிறதா என்று கவனித்து விரிவான மார்புடைய பறவைகளையே வாங்கவேண்டும். வான்கோழி இந்த விதிக்கு விலக்கானது. அகன்ற மார்புடைய வான் கோழியை விடக் குறுகிய மார்புடைய பறவையே சிறந்தது.

வேறு நாடுகளில் வளர்ப்புமுறை சிறந்திருப்பதனால் வான்கோழியின் எடை அங்கே அதிகமாக இருக்கிறது. டர்க்கிச் சேவலின் கனம் அங்கே 20 முதல் 25 ராத்தலாகும். பேடையின் கனம் 15 முதல் 18 ராத்தலாம். நம் நாட்டில் சேவலும் பேடையும் எடையில் அதிக வேறுபாட்டைக் காட்டாமல் சுமார் 10 ராத்தல்தான் இருக்கும்.

வான்கோழிப்பண்ணை ஒன்றை வைக்க விரும்புகிறவர்கள் 7 முதல் 10 பேடைகளுக்கு ஒரு சேவலை வாங்கிக்கொள்ளவேண்டும்.

## முட்டைகள்

பெண் பறவைகள் ஆண்பறவைகளின் தொடர்பில்லாமலே முட்டை இடுகின்றன. ஆனால் குஞ்சாக வளரக்கூடிய ஜீவ அணு அந்த முட்டைகளில் இல்லை. அவைகளை அடையில் வைத்துக் குஞ்சுகளைப் பெறமுடியாது. அவை வளமில்லா முட்டைகள் (Infertile eggs) எனப்படும். கோழிகளை வளர்ப்பவர்கள் சேவலே இல்லாமல் பேடை


களை மட்டும் நூற்றுககணக்கில் வளர்க்கும் பல பண்ணைகள் மேல்நாடுகளில் இருக்கின்றன. அங்கே ஜீவகாருண்யமுள்ள சிலர் வளமில்லாத முட்டைகளை இந்தப் பண்ணைகளிலிருந்து வாங்கி உணவுக்காக உபயோகித்துக்கொள்வதுண்டு. டர்க்கிக் கோழியின் முட்டைகளை எவரும் தின்பதில்லை. ஆதலால் அதன் வளமில்லா முட்டைகள் வளர்ப்போருக்கு நஷ்டமே. ஆதலினுல் டர்க்கிச் சேவலில்லாமல் பெண் டர்க்கிகளைமட்டும் வளர்ப்பது கூடாது. அதனுல் பண்ணை பெரியதாவதற்கு வழி இல்லை.

ஒரு வான்கோழி ஓர் ஆண்டில் 50 முதல் 70 முட்டைகள் இடக்கூடும். முட்டை இடுவதற்கென்று அவைகளுக்கு நாம் செயற்கைக் கூடுகளை அமைத்துத் தரவேண்டும். அது இடும் முட்டைகளை அன்று அன்று எடுத்துக் குளிர்ச்சியான இடத்தில் வைத்தல் அவசியம்.

வான்கோழிகளுக்குப் பகல்நேரம் அதிகமாக உள்ள மாதங்களே முட்டை இடுவதற்கு விசேஷமான காலம் என்று தெரிகிறது. மழைக்காலத்திலும் குளிர்காலத்திலும் அவை அதிகமாக முட்டை இடுவதில்லை. மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் அவை ஒழுங்காக முட்டைகளைத் தருகின்றன.

கூரைவீட்டில் மணலைப் பரப்பி அதன் மேல் ஒரு பானையை வைக்கவேண்டும். பானையில் அரிசித் தவிடு அல்லது கோதுமைத் தவிட்டைப் போடவேண்டும். இந்தத் தவிட்டுப் பானையில் முட்டைகளை வைக்கவேண்டும். வெயில் மிகுந்த காலத்தில் மணலின்மேல் ஜலம் தெளித்து வரவேண்டும். இப்படிச் செய்வதனுல் முட்டைகள் இருக்குமிடம் குளிர்ச்

சியாக இருக்கிறது. முட்டைகள் ஐந்தாறு நாள் கெடாமல் இருப்பதற்கு அவைகளைச் சேமித்து வைக்கும் ஏழைகளின் 'பிரிஜிடர்கள்' இந்தப் பானைகளே! தவிட்டுப் பானையில் முட்டைகளை வைக்கும்போது முட்டையின் தலைப்பாகம், அதாவது அகன்ற பாகம் மேலே இருக்கவேண்டும். நுனிப் பாகம் மேலேயும் தலைப் பாகம் கீழேயும் இருக்கும் படி முட்டையை வைத்தால் அதிலிருக்கும் ஜீவ அணு இறந்து முட்டை கெட்டு விடும். கோழிமுட்டை முதல் எல்லாப் பறவைகளின் முட்டைகளையும் சேமித்து வைக்கும் முறை இதுதான்.



வான்கோழியில் வேறு வகை

## அடைகாப்பு

டர்க்கி தன் முட்டைகளை அடைகாக்கும் இயல்பினதே. ஆயினும் கோழியைக் கொண்டே அடைகாக்க வைத்தல் மேலானது. அடைகாக்கும் திறமை டர்க்கியைவிடக் கோழியினிடமே அதிகமாய் உள்ளது. ஒரு கோழி 8 முதல் 10 டர்க்கியின் முட்டைகளை அடைகாக்கும். அடைகாப்புக் காலம் 28 நாள். ஒரு பருவத்தில் டர்க்கி இடும் முட்டைகளில் தொடக்கத்தில் இடப்படும் முட்டைகளிலிருந்தே வலிவுள்ள குஞ்சுகள் தோன்றுகின்றன.

அடைகாப்பு முறை கோழி முட்டைகளின் அடை காப்புக்கு இருக்கிறபடிதான். முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்படும் தினங்கள் வேறுபடுகின்றனவே அல்லாமல் முறையில் வித்தியாசமே இல்லை.

## குஞ்சு வளர்ப்பு

வான்கோழியின் குஞ்சுகள் தாய்க் கோழியுடன் ஆறுவாரம் சேர்ந்து இருக்கலாம். அதன் பிறகு அவை தன்னந்தனியாக வாழக்கூடும். முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்த மூன்று நாள் வரையில் அதனை வெளியே நடமாட அநுமதிக்கக் கூடாது. வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருக்க வேண்டும். அற்ப ஈரமும், இளவெயிலும், சிறு குளிருங்கூட 3 நாளுக்கு உட்பட்ட குஞ்சுகளைப் பாதிக்கக் கூடும்.

முட்டையிலிருந்து வெளிவந்த 36 மணிக்குமேல் தான் குஞ்சுக்கு ஆகாரம் தரவேண்டும். ஆடை எடுத்த பாலைக் காய்ச்சி வெப்பமாக உள்ள நிலையில் தரலாம். கோழிமுட்டையின் வெள்ளைச் சத்து, மஞ்சள் சத்துக்கள் சிறு குஞ்சுகளுக்குச் சிறந்த ஆகாரமாகும். முட்டையை வேகவைத்த பிறகே அதன் சத்துக்களைத் தரவேண்டும். சத்துள்ள அரிசி அல்லது கோதுமைத் தவிட்டை ஈரமாக்கி அதில் உப்பைக் கலந்து தரலாம். மீன் எண்ணெயில் இரண்டொரு துளிகளையும் இளந்தளிர்களில் சிறிதளவையும் தந்துவரவேண்டும். கிளிஞ்சில் தூள், கரித்தூள் இவைகளைக் குஞ்சுகள் கொத்தும்படி செய்ய வேண்டும். வயது வந்த பறவைகளுக்கும் இவை இரண்டும் அவசியம்.

குஞ்சுக்கு முதல் வாரத்தில் தினம் 6 தடவை உணவு தரவேண்டும். அதன்பின் நான்காம் வாரம் முடிய 4 தடவை தரவேண்டும். ஐந்தாம் வாரத்தி லிருந்து 3 தடவை உணவு கொடுத்தால் போதும். வயது ஆக ஆக உணவின் அளவை அதிகமாக்கி வரவேண்டும்.

குஞ்சுகளுக்குத் தாமாக உணவை உண்ணத் தெரியாது. இதைத் தாய்க்கோழி பழக்கித் தரும்; என்றாலும் நாம் அவைகளை உண்ணும்படி பழக்கு வதும் அவசியமாகலாம்.

ஆறு வாரம் வரையில் குஞ்சுகள் வீட்டுக்குள் நிழலிலேயே நடமாடுதல் நல்லது. வெளியே முற் றத்தில் நடமாடவேண்டுமானால் தரையில் ஈரம் இருக்கக்கூடாது. நடமாடும் இடத்தில் நிழல் தரும் மரங்கள் இருக்கவேண்டும். 8 வாரத்துக்குப் பிறகு குஞ்சுகள் யௌவன தசையை எட்டிப் பார்த்து விடுகின்றன. அதனால் அவை தம் இஷ்டம் போல் திரியலாம். ஆயினும் குப்பையில் திரியும்படி விடக் கூடாது.

கோழிக் குஞ்சுகளைப்போல வான்கோழிக் குஞ்சுகளும் உயரமான இடங்களில் ஏறிக் குதித்து விளையாடவும் அங்கேயே பொழுது போக்கவும் விரும்புகின்றன. அதனால் அவைகளுக்கு 2 அடி உயரமுள்ள உட்காரும் சட்டங்களை (Perches) அமைத்துத் தரவேண்டும். இந்தச் சட்டங்களின் மீது அவை இருக்கும்போது சூரியவெளிச்சமும் தூய காற்றும் அவைகளுக்கு நிறையக் கிடைக்கின் றன. அதனால் அவைகளின் ஆரோக்கியம் கெடு வதில்லை.

குஞ்சுகளுக்கு ஏற்ற அடைப்பிடம் பஞ்சாரக் கூடைதான். வயதுவந்த பறவைகளுடன் குஞ்சுகளை வைக்கக்கூடாது. பெரிய பறவைகளுக்குத் தனியான கோழி அறைகளைக் கட்டவேண்டும். ஒரு பறவைக்கு 6 சதுர அடிக்குக் குறையாத பரப்பு இருக்கும்படி நம்மிடமுள்ள பறவைகள் அனைத்துக்கும் ஏற்ற விஸ்தீரணத்தில் அந்த அறை அமைய வேண்டும். கோழி அறையின் விவரங்கள் கோழிப் பண்ணை என்ற நூலுள் காணப்படுகின்றன.

## நோய்கள்

வான்கோழிகளில் பெரியவற்றையும் குஞ்சுகளையும் எப்பொழுதும் பிரித்தே வைக்கவேண்டும். குஞ்சுகள் எளிதில் நோய்வாய்ப்படாமலிருக்க இது அவசியம். வீடுகளில் கோழி வளர்ப்போர் அவைகளுடன் வான்கோழியையும் சேர்த்து வளர்க்கலாம்.


அறையில் பரப்பும் வைக்கோல் துணுக்குகளை ஈரமாக்காமல் பார்த்துக்கொள்வதனாலும், காற்றோட்டமுள்ளனவாக அந்த அறைகளை அமைப்பதனாலும் பகல் நேரத்தின் பெரும்பாகத்தை வான்கோழிகள் வெட்டவெளிகளில் கழிப்பதனாலும் அவை சத்துள்ள கலப்புணவை வேளை தவறாமல் பெற்று வருவதனாலும் நோய்களிலிருந்து காப்பாற்றப் படக்கூடும். நோய்கள் அணுகாமல் தடைமுறைகளாக நாம் அமைக்கும் ஏற்பாடுகள் இவையே. சுத்தமே எல்லாவற்றிலும் முதன்மையானது.

———

# 7. கினியாக் கோழி

## மயிலும் கினியாவும்

**கோ**ழிக் குடும்பத்தில் பெரும்பாலும் மயிலை ஒத்திருப்பது கினியாக் கோழி. இதற்கு மயிலுக்கிருப்பது போல் நீண்ட தோகை இல்லை; அதனைப் போல் ஆடவும் செய்யாது. ஆயினும் தோற்றத்தில் பெண் மயிலை ஒத்திருக்கும். மயிலின் நிறமும் இதற்கு இல்லை. ஆயினும் மயில்களைப் போல் இது மரங்களுக்குப் பறந்து சென்று அங்கேயே காலங்கழிக்க விரும்புகின்றது. மயிலுக்கும் பாம்புக்கும் பகை என்பார்கள். கினியாக்கோழி ஒரு பாம்பைப் பார்த்து விட்டால் லேசில் அதை விட்டுவிடாது. தன்னல் அதனைக் கொல்லமுடியாமற் போகுமேல் பெருங் குரலில் ஆரவாரஞ் செய்து சுற்றுப்புறங்களில் உள்ள மனிதரை அந்த இடத்துக்குக் கொண்டுவந்து அந்தப் பாம்புக்கு அழிவைத் தேடக்கூடிய இயல்பு கினியாவினிடம் காணப்படுகிறது. இந்த இயல்புக்காகவே பலர் கினியாக்கோழிகளைத் தம் வீடுகளில் வளர்க்கிருர்கள். மேலும் பங்களாத் தோட்டங்களுக்கு அழகைத் தரும் பறவைகளில் மயிலைப்போல் இவையும் முக்கியமானவை. வளர்ப்பு முறை மயிலுக்கும் இதற்கும் ஒன்றுதான்.



கினியாக் கோழி

## இயல்புகள்

கினியாவை, 'பங்களாவின் காவற்காரப்பறவை' என்று சொல்லலாம். ஆங்கிலத்தில் இதனை, 'காவல் காக்கும் நாய்' (Watch dog) என்பார்கள். மரங்களிலேயே காலங்கழிப்பதனால், தான் இருக்கும் இடத்துக்கு வரும் மனிதர் முதல் எந்தப் பிராணியையும் இது எளிதில் கண்டுகொள்ளுகிறது. ஆளைக் கண்டுவிட்டால், அல்லது ஒரு பிராணியைக் கண்டுவிட்டால், உடனே இது உரக்கக்கூவி அதன் வருகையைப்பற்றிப் பங்களாவில் உள்ளவர்களை உஷார்ப் படுத்துகிறது.

காடுகளிலே தம் இயல்பில் திரியும் கினியாக்களின் வாழ்க்கை விநோதமானது. பெண்பறவை தரையில் புதர்களின் இடையில் எவர் கண்ணுக்கும் புலப்படாத இடத்தில் தன் கூட்டை அமைத்து அங்கே முட்டையிட்டு அவைகளை அடைகாத்து வரும். ஆண்பறவை, அருகிலுள்ள மரத்தின்மேல் இருந்துகொண்டு பெண் இனத்துக்கு யாதொரு தீமையும் நேராவண்ணம் காவல் புரிகிறது. கூட்டினிடம் எந்த விலங்கேனும் மனிதனேனும் செல்வதைக் கண்டால் உடனே சேவல் பலமாகக் கத்திப் பெண்பறவையை ஜாக்கிரதை செய்கிறது. அப்பொழுது பெண்பறவை கூட்டிலிருந்து பறந்து மரத்துக்குச் சென்றுவிடும்.

காட்டிலே உள்ள கினியாக்களைப் பிடித்து வரச் செல்கிறவர்களுக்கு அவை எங்கே கூடுகட்டியிருக்கும் என்பது தெரியாது. புதர்களை அவர்கள் எங்ஙனம் சோதனை செய்வார்கள்? அவைகளின் கூட்டை அறிந்துகொள்ள அவர்கள் ஒரு தந்திரத்

தைக் கையாளுகிறார்கள். காட்டிற்குப் போனதும் அவர்கள் எந்த மரத்தில் கினியா இருக்கிறது என்று முதலில் தேடிக்கொள்ளுவார்கள். உடனே அந்த மரத்துக்கு அருகில் இப்படியும் அப்படியுமாக நட மாடுவார்கள். கினியாவின் கூடு அங்கே ஓரிடத்தில் இருக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். அவர்கள் நடமாடும்போது தற்செயலாகக் கூட்டின் அருகில் செல்வார்களே ஆனால், மரத்திலிருக்கும் ஆண் பறவை பலமாகக் கத்திவிடுகிறது. உடனே புதர்களுக்கிடையிலிருக்கும் கூட்டிலுள்ள பெண் பறவை வெளியே பறந்து வந்து விடுகிறது. கூட் டைத் தேடி அலைகிறவர் இக்காட்சியைப் பார்த்து விடுகிறார்கள். சில நிமிஷங்களில் கூடு இருக்கும் இடம் அவர்களுக்குத் தெரிந்து விடுகிறது. பிறகு அவர்கள் கூட்டிலுள்ள முட்டைகளையும் குஞ்சு களையும் கொண்டுவந்து வளர்க்கிறார்கள் ; பிறருக்கு விற்கிறார்கள்.

வீட்டில் வளர்க்கும் கினியாவுக்கு முட்டை இடு வதற்கு மறைவான இடத்தில் ஒரு கூட்டை அமைத் துத் தரவேண்டும். அதில் அது முட்டை இட இட அந்த முட்டைகளை எடுத்துவந்து கோழியைக் கொண்டு அடை காக்கச் செய்து குஞ்சுகளை உண்டு பண்ணவேண்டும். பழக்கப்பட்ட கினியா நாம் ஏற்படுத்தும் இடத்தில் முட்டை இடும்.

இரவு நேரங்களில் கினியாக்கள் மரங்களின் பேரில்தான் காலங்கழிக்கும். குஞ்சுக்கு 6 வார வயது ஆகிவிட்டால் அது தானாக மரத்துக்குப் போய்விடுகிறது. 6 வாரமே அது வீட்டுக்குள் இருக்கும்.

கினியாக்களில் ஆண்பெண் பறவைகளை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். பெட்டைக்கோழிக்கும் சேவலுக்கும் இருப்பனபோல் இவைகளுக்கும் கொண்டையும் தாடியும் (Comb and Wattles) உண்டு. ஆண்பறவைகளுக்கு இவை இரண்டும் சேவலுக்கு இருப்பதுபோல் அதிக நீளமாகத் தோன்றும். 2 மாதப் பறவையினிடம் இந்த வேறுபாடு நன்ருகத் தெரிந்துவிடும். சேவல் கத்துவதற்கும் பெட்டைக் கோழி கொக்கரிப்பதற்கும் வித்தியாசம் உண்டு அல்லவா ? அதைப்போலவே ஆண் கினியாவுக்குப் பெருங்குரலைக் கடவுள் அமைத்திருக்கிருர்.

இனத்தினிடம் அபிமானமுள்ள இந்தப் பறவையை நாம் தனியாக வளர்ப்பது பாவம். ஆணும் பெண்ணும் இல்லாமல் ஒரே இனத்தை நாம் வளர்த்தல் கூடாது. ஓர் ஆண் பறவைக்கு இரண்டு அல்லது மூன்று பெண் பறவைகள் இருக்கலாம். குறைந்த பட்சம் ஒன்றேனும் அவசியம். இனப்பெருக்கத்துக்கும் இது அவசியம்.

வீடுகளில் நாம் இவைகளைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. இரும்பு வலை அடைப்பில் எப்படி வைப்பது? அதற்குச் செலவு அதிகம் கொள்ளும். உயரத்தில் பறந்து செல்லும் இயல்பு கினியாவிடம் இருப்பதனல் பல இடங்களுக்கு இது பறந்து போய் மாலையில் திரும்புதல் கூடும். கோழிகளை வளர்ப்பவர்கள் தங்கள் கோழிகளை மற்றவர்களுடைய கோழிகளுடன் திரியவிட்டால் அவைகளுக்கு நோய் வந்து விடும் என்று அவைகளை வேலி அடைப்பில் வைத்து வளர்க்கிருர்கள். கோழிகளுடன் இரண்டு மூன்று கினியாக்கள் இருந்துவிட்டால் அவை பல இடங்

களுக்குச் சென்று அங்கங்கே உள்ள நோய்களைப் பண்ணைக்குக் கொண்டு வந்து விடக்கூடும்.

## வகை

நிறம்பற்றி அல்லாமல் வேறு விதத்தில் கினியாக்களின் வகைகளைக் கண்டுகொள்ள முடியாது. வெள்ளைநிறமுள்ளவையும், சீட்டித்துணியில் இருப்பதுபோல் வெள்ளையும் கருமையும் கலந்த நிறமுள்ளவையும் வேறு வேறு இனங்களாகும். இரண்டு இனங்களின் தன்மைகளிலும் வேறுபாடு இல்லை.

## உணவு

கினியாக் கோழிகள் புழு பூச்சிகள், இளந்தளிர்கள், அற்பத் தானியங்கள் முதலிய எவற்றையும் உண்ணக்கூடும். தம் இரையை அவை தாமாகவே தேடிக்கொள்கின்றன. நாம் சிறிதளவு கொடுத்தால் போதும். சோளம், பருப்புவகைகளின் நொய், காய்கறி, சோறு முதலிய எல்லாவற்றையும் உண்ணும். இயற்கையில் அவைகளுக்குக் குடிநீர் கிடைக்காமற் போகுமேல் நாம் சிறு தொட்டிகளில் அதனை வைக்கவேண்டும். கிளிஞ்சில்தூள், சுண்ணும்புக்கற்கள், கரித்தூள் இவைகளை நாம் வைக்கவேண்டாம். அவை தாமாகவே தேடிக் கொள்ளும். பங்களாக்குள்ளேயோ, கம்பி வலைக்குள்ளேயோ அடைபட்டிருக்கும் கோழிகளுக்கு இவற்றை நாம் அவசியம் தரவேண்டும்.

## அடைகாப்பு

கினியாக் கோழி ஒன்று ஒரு வருஷத்தில் உத்தேசமாக 30 முட்டைகளிடும். கோழி இனங்களைச் சேர்ந்த எல்லாப் பறவைகளின் முட்டைகளைக் காட்

டிலும் இவற்றின் முட்டைகள்தான் சிறியவை. முட்டை தவிட்டு நிறமாக (Dark brown) இருக்கும். அதில் புள்ளிகள் காணப்படும். கினியாப்பறவை 5 அல்லது 6 முட்டைகளை இட்டதும் அடைகாக்க வேண்டும் என்ற ஆசை அதற்கு ஏற்பட்டு விடுகிறது. அதனால் முட்டையிடுவது நின்று விடக்கூடும். அந்த ஐந்தாறு முட்டைகளையே அது அடைகாக்கக்கூடும். இந்த இயல்பு அதனிடம் இருப்பதனால் நாம் அதிகமான குஞ்சுகளை உற்பத்தி செய்யமுடியாது. ஆகவே ஒரு பறவை முட்டை இட இட, அந்த முட்டைகளை நாம் எடுத்து ஜாக்கிரதையான இடத்தில் வைக்க வேண்டும். இந்தவிதமாகப் பல கினியாப்பறவைகளின் முட்டைகளை ஒன்று சேர்த்து ஒரு கோழியிணிடம் அடைகாக்க ஒப்படைக்கவேண்டும். கோழி 15 முதல் 20 கினியா முட்டைகளை அடைகாத்தல் கூடும். அடை காப்பு நாள் 28.

## குஞ்சு வளர்ப்பு

முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்ததும் அவைகளைத் தாய்க் கோழியுடன் வேறோர் இடத்துக்குக் கொண்டுபோகவேண்டும். குளிர், வெயில், காற்று, ஈரம் இவைகளைக் குஞ்சுகள் பொறுப்பதில்லை. ஒருவாரம் வரையில் அவைகள் வீட்டுக்குள்ளேயே குறிப்பிட்ட பரப்பில் நடமாடித் திரியலாம். வெளியில் அவைகளை அநுமதிக்கக்கூடாது. 6 வாரத்துக்குமேல் தாய்க்கோழியின் சகாயம் குஞ்சுகளுக்கு வேண்டுவதில்லை. குஞ்சுகளுக்குரிய ஆகாரம் முதலியன வான்கோழியின் குஞ்சுகளுக்கு உள்ளபடிதான்.

# 8. மயில்

நம் தேசத்தில் மயில்கள் காட்டுப் பறவைகளாகத் தம் விருப்பம் போல் திரிகின்றன. காடுகளிலிருந்து இளங் குஞ்சுகளைக் கொண்டுவந்து வீடுகளில் வளர்க்கவேண்டும்.

மயில் தெய்விகத் தன்மை வாய்ந்ததாக இந்துக்கள் கருதுகிறார்கள். முருகக் கடவுளின் வாகனமென்று கருதி அதனை எவரும் கொல்லுவதில்லை. இறைச்சியின் பொருட்டு மயிலை வளர்ப்பவர்கள் நம் நாட்டில் இல்லை. பங்களாக்களுக்கு மிகுந்த அழகைத் தரும் பிராணி மயில். நம் வீட்டுக் கொல்லையில் ஐந்தாறு மரங்கள் இருந்துவிட்டால் மயில்கள் தங்குவதற்கு அந்த மரங்களின் சூழ்வு போதும். காலையில் எழுந்து மயிலைத் தரிசிப்பது லக்ஷ்மீகரம். விடியற்காலத்தில் அது கூவி நம்மை எழுப்பிவிடும். வீட்டுப் பறவைகளில் நோய் நொடிகள் இல்லாதது குள்ளவாத்துக்கு அடுத்தபடி மயில்தான். அதனை வளர்ப்பது மிகவும் எளிது. மயில் நடமாடும் இடத்தில் ஸர்ப்பங்கள் அணுகுவதில்லை. மயிலின் குரலைக் கேட்டாலே பாம்புகள் அஞ்சி அகன்று விடும்.

என் சிறுவயதில் அக்கம் பக்கமாக இருந்த நாங்கள் ஏழு குடும்பத்தினர் ஏழு மயிற்குஞ்சுகளை வளர்க்கலானோம். தாய் மயிலின் துணை இல்லாமல் தாமாக வளரக்கூடிய பருவத்தில் அவை இருந்தன. பூனை அடித்துப் போகாதபடி அவைகளைப் பத்திரமான இடத்தில் வைத்து வளர்த்தோம். பகலில் வீடு முழுவதும் அவை தாராளமாக நடமாடும் கோழிக் குஞ்சுக்குப் போடுவது போன்ற தீனியைத்

தவிர வேறு எந்த ஆகாரத்தையும் அவை களுக்கு நாங்கள் போடவில்லை. மூன்று மாதங் களுக்குப் பிறகு ஐந்து பேருடைய குஞ்சுகள வளர்ப் போரின் கவனக் குறைவினால் இறந்து போயின. இருவருடைய மயில்கள் வளர்ந்து பெரியவை ஆகி விட்டன. எங்கள் வீட்டிலிருந்தது பெண்மயில்; அடுத்த வீட்டாருடையது ஆண்மயில். நாங்கள் இரு குடும்பத்தினரும் வளர்ப்பில் மிகுந்த கவனம் செலுத்தி வந்ததால் அவை கொழுகொழுவென்று வளர்ந்துவிட்டன. மூன்று வருஷங்களுக்கப்பால்



மயில்

எவரோ பொறாமையினால் பெண்மயிலின் காலை ஒடித்துவிட்டனர். காலுக்குக் கட்டுப்போடுவதற் குக்கூட அந்த மயில் இடந்தரவில்லை. மூன்று நாளில் அது இறந்துவிட்டது. ஆண்மயில் மட்டும் ஆறு வருஷங்கள் ஜீவித்திருந்தது.

நாங்கள் மயிலை வளர்த்து வந்த நாளில் ஒரு சமயம் நடந்த நிகழ்ச்சி ஒன்று என் நினைவில் பதிந்

திருக்கிறது. ஒரு நாள் அந்தி மாலை நேரத்தில் என் மகன் என்னை அழைத்துத் தான் ஒரு வேடிக்கை காட்டப் போவதாகக் கூறினான். அவன் கையில் ஒரு ரப்பர்ப் பாம்பு இருந்தது. இருவருமாகக் கொல்லையில் மயில் இருக்கும் இடத்துக்குச் சென்றோம். நாங்கள் மறைவான ஓர் இடத்தில் நின்று கொண்டோம். பையன் ரப்பர்ப்பாம்பை மயில் காணும்படி எறிந்தான். மரத்தின் மீதிருந்த மயில் அதைப் பார்த்துச் சிறகுகளை அடித்துக்கொண்டு வேகமாகப் பறந்து வந்து பாம்பைப் பற்றிக் கொண்டது. அரை க்ஷணத்தில், அது பாம்பு அல்ல என்பதை மயில் அறிந்துகொண்டது. உடனே அது பாம்பைக் கீழே போட்டுவிட்டு ஒரு மூலைக்குச் சென்று தலையை வயிற்றின்மேல் வைத்துக் கொண்டு எங்களைப் பார்ப்பதற்கு வெட்கப்படுவது போல் நின்றது. தன் ஏமாற்றத்தை நாங்கள் எங்கே பார்த்துவிட்டோமோ என்று அதற்கு வெட்கம் போலும்!

கோழி இனத்தில் கினியாவும் மயிலும் வீரமுள்ள பறவைகள். ஆண்மயில் எவரையும் தன் அருகில் அண்டவிடுவதில்லை. புதியவர்களைக் கண்டால் கொத்த வருவதுபோல் அது பயமுறுத்தும். இங்ஙனம் இருக்க, தமிழ் நூல்கள், 'மயில் சாந்தமுள்ள பிராணி; பெண்மைக் குணம் மிகுந்தது அது' என்று கூறுகின்றன. பறவை இனங்களில் எந்தப் பறவை ஆயினும் சரி, அதன் ஆண்பறவை சேவல் எனப்படும் என்றும் ஆண்மயிலை மட்டும் சேவல் என்று அழைக்கக் கூடாதென்றும் தொல்காப்பியம் என்ற மிகப் பழைய நூல் கூறுகிறது.

சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே

என்று அந்நூலில் ஒரு சூத்திரம் காணப்படுகிறது. அதற்கு உரை எழுதிய ஒருவர், 'பறப்பனவற்றுள் ஆண்பாலுக்கெல்லாம் சேவல் என்ற பெயர் உரியதாகும்; அவற்றுள் மயிலுக்காயின் அந்தப் பெயர் ஆகாது' என்கிறார். 'குமரவேள் ஊர்ந்த மஞ்ஞைக்காயின் அதுவும் நேரவும் படும்' என்கிறார். முருகக் கடவுள் ஏறும் மயிலைச் சேவல் (வீரமுள்ளது) என்பதில் அவருக்கு ஆட்சேபமில்லை என்று தெரிகிறது.

வெயிலைப் பொறுத்துக்கொள்ளும் இயல்பு மயில்களிடம் இல்லை. மரங்களும் செடிகளும் புதர்களும் அடர்ந்த இடத்திலேயே மயில்கள் வெயில் வேளையைக் கழிக்கின்றன. ஆகாயம் மப்பு மந்தாரமாக இருந்தால் அப்பொழுதெல்லாம் மயில்களுக்குக் குதியாட்டந்தான். கோடைக்காலத்தில் மழை பெய்தபிறகு குளிர்ச்சியாக இருக்கும் சமயம் மயில்கள் சந்தோஷமாக இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். மயில்கள் மேகங்களைக் கண்டால் சந்தோஷம் கொள்ளும் என்றும், மழைக்காலம் மயிலுக்கு ஏற்ற பருவம் என்றும் சொல்லுவது முற்றும் பொருந்தும். ஏனெனில், இந்தக் காலத்தில் நம் நாட்டில் வெயில் இல்லை. மழைக்காலத்தை அடுத்து மூன்று மாதங்களும் இந்தப் பறவைக்கு விருப்பமான பருவந்தான்.

வீடுகளின் பக்கத்தில் சோலை அல்லது மரங்களின் கூட்டம் இல்லாதவர் மயிலை வளர்ப்பது கஷ்டம். மரமே இல்லாத இடத்தில் மயில் நிலை

கொள்வது அரிது. இரவு நேரத்தில் மயில் மரத்துக்குச் சென்று அங்கேயே தூங்கும்.

மயில்களுக்குத் தாயகம் இந்தியாவே. ஜாவாவிலும் மயில்கள் காணப்படுகின்றன. பழங்காலத்தில் மயில்கள் தமிழ் நாட்டிலிருந்து மேற்குநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனவென்று தெரிகிறது. மயிலைக்குறிக்கும் தோகை என்ற பெயர் ஹீப்ரு பாஷையில் சிறிது சிதைந்து வழங்குகின்றது.

மயிலை வீடுகளில் வளர்க்க விரும்புகிறவர்கள் குஞ்சுகளைக் கொண்டுவந்து வளர்க்கவேண்டும். பெரிய மயில்களை வளர்ப்பது கஷ்டம். குஞ்சுகளுக்கு நடமாட விஸ்தாரமான இடம் வேண்டும். பகலில் 9 மணிக்கு மேல் 4 மணிக்கு முன் குஞ்சுகளை வெயிலில் திரிய விடக்கூடாது. வெயில் காலத்தில் குஞ்சு ஜலத்தை அதிகமாகச் சாப்பிடும். அதனால் எப்பொழுதும் சுத்த ஜலம் அதற்குக் கிடைக்கும்படி வைக்கவேண்டும்.

பருப்பு வகைகள், சோளம், அரிசி, கம்பு முதலியவற்றின் நொய், சோறு, கறையான், புழு பூச்சிகள் இவைகள் குஞ்சுகளுக்கு விருப்பமான உணவு. புளிக்காத மோரையும் தண்ணீர் கலந்த பாலையும் குஞ்சுகளுக்குத் தரவேண்டும். தவிட்டுடன் சிறிதளவு உப்பைச் சேர்த்து ஊறவைத்து மயிலுக்குத் தரவேண்டும்.

இரவில் பூனையின் உபத்திரவம் இல்லாத இடத்தில் குஞ்சுகளை வைக்கவேண்டும். பஞ்சரக் கூடை போன்ற பெரிய கூடைகளில் கவிழ்த்து வைக்கலாம். சிறிய மயிலறைகளைக் கட்டி அவைகளில் அடைத்து வைக்கலாம். உயரமான இடத்தில்

இருக்க மயிற்குஞ்சுகள் விரும்புகின்றன. அப்படி இருப்பதனால் அவைகளின் ஆரோக்கியம் கெடுவதில்லை. ஆகவே, இரண்டடி உயரத்தில் உட்காரும் சட்டங்களை நாம் தயார் செய்து தரவேண்டும். தாயின் பராமரிப்பில் இல்லையானால் குஞ்சுகள் தனித்தனியாக மூலை முடுக்குகளை நாடி அங்கே பதுங்கித் தூங்க விரும்பும்.

ஆறுமாத வளர்ச்சி அடைவதற்குள் குஞ்சுகளை ஆண், பெண் என்று நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியும். அந்தப் பருவத்தில் ஆண் மயிலுக்கு வால் இறகு (தோகை) முளைத்து விடத் தொடங்கி விடுகிறது. கழுத்தின் நீல நிறம் மட்டும் ஒரு வருஷம் வரையில் தோன்றாது. ஆண் மயிலின் தோகை முழு வளர்ச்சி பெறுவதற்குள் மயில் மூன்று பிராயத்தை அடைந்து விடும்.

பெண் மயில்கள் ஐந்துக்கு ஓர் ஆண் மயில் அவசியமாகும். பெண் மயில் கூட்டத்தில் இரண்டு ஆண் மயில்களை விட்டால் அந்த இரண்டும் தம்முள் பொறாமைப் படுவதில்லை. கோழிச் சேவல்களைப் போலப் பகைத்துச் சண்டையிடுவதில்லை.

பிறந்த இரண்டாம் வருஷத்தில் பெண் மயில் முதல் முதல் முட்டையிடத் தொடங்கும். தன் முட்டைகளை அது அடைகாத்துக் குஞ்சுகள் வெளிப் படும் வரையில் பொறுமையுடன் அடையில் இருக்கிறது. மயில் முட்டைகளைப் பெட்டைக் கோழி அடை காக்காது. மயில் முட்டைகள் அடையில் இருக்க வேண்டிய காலம் 28 முதல் 30 நாள்.

மூன்று வாரம் வரையில் குஞ்சுகளுக்குத் தாயின் பாதுகாப்பு அவசியமாகும். அந்தக் காலத்துக்குப் பிறகு நாம் அவைகளைப் பிரித்துவிடலாம்.

# 9. புறா

புறா தமிழ் நாட்டில் பண்டைக்கால முதல் இருந்து வரும் பறவை. தமிழ் இலக்கியங்கள் பல அதன் இயல்புகளை விவரிக்கின்றன. புறாக்களின் கற்பு, சதிபதிகளின் அந்நியோன்யம், அவை கற்களை உண்ணுதல், அவைகளை வீடுகளில் வளர்த்தல் முதலிய செய்திகளைப் பழைய தமிழ்நூல்கள் கூறு கின்றன. இச்செய்திகள் இக்கால விஞ்ஞான ரீதிக்கு மாறுபட்டவை அல்ல. ஒரு காட்சி பின் வருமாறு:

வீடுகளில் புறாக்களை வளர்க்கிறார்கள். அவை களுக்குக் கூடுகளை அமைத்துக் கொடுத்துள்ளார் கள். அக்காலத்தார் அக்கூடுகளை மதலைப்பள்ளி என்று வழங்கினார்கள். கார்காலம் கடுமையாக இருக்கிறது. அதனைச் சார்ந்து வந்த குளிர்கால மும் அப்படியே. தூறலும் வாடைக்காற்றும் மிகுதி யாக இருப்பதால் இரைதேடப் புறாக்களால் வெளியே செல்ல இயலவில்லை. அவை தம் கூடு களிலேயே நின்றவண்ணம் காலங் கழிக்கின்றன. நீண்ட நேரம் நின்றுகொண் டிருப்பதில்தான் அவைகளுக்குப் பிரியம். கால்கள் வலி எடுத்த போது ஒரு காலை மாற்றி மற்றொரு காலை ஊன்றி அவை ஒற்றைக் காலில் நின்று அவஸ்தைப் படு கின்றன. இந்தக் காட்சியை,

> "மனையுறை புறவின் செங்காற் சேவல்
> இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணாது
> இரவும் பகலும் மயங்கிக் கையற்று
> மதலைப் பள்ளி மாறுவன இருப்ப"

என்று நெடுநல்வாடை என்ற நூல் சித்திரிக்கிறது.

பறவை இனங்கள் சிறு கற்களையும் கிளிஞ்சி லின் ஓடுகளின் துணுக்குகளையும் தின்பது இயல்பு. உண்ட உணவு ஜீரணமாவதற்குச் சிறு கற்களை அவை தின்னுகின்றன. சுண்ணம்புக்கல், கிளிஞ் சில் ஓடு இவைகள் பறவைகளின் எலும்புகளையும் அவை இடும் முட்டைகளின் மேலோடுகளையும் உறுதியாக்குகின்றன. தமிழ்ப்புலவர்கள், புறாக் கள் நீர் நிலைகளுக்கு அருகில் மணற்பாங்கான இடங்களில் சிறு கற்களையும் கிளிஞ்சில் தூளையும் பொறுக்கி உண்பதைக் கண்டு அவை கற்களை உண்பதாக எண்ணி அச்செயலை வர்ணித்திருக் கிறார்கள்.

> " பொறிவரிப் புறவின் செங்காற் சேவல்
> சிறுபுன் பெடையொடு சேட்புலம் போகி
> அரிமணல் இயவில் பரல்தேர்ந் துண்டு "

என்று அகநானூறு என்ற நூலிலும்,

> " நுண்பொறிப் புறவின் செங்காற் சேவல்
> வெண்சிறைப் பெடையொடு விளையாட்டு விரும்பி
> வண்பரல் ஆர்ந்த வயிற்ற வாகி "

என்று பெருங்கதை என்ற நூலிலும் கல்லைப் புறா உண்ணும் செய்தி கூறப்படுகின்றது.

வீடுகளை அமைப்போர் மேல் மாடிகளில் புறாக்கள் தங்கி இன்பமுடன் காலங் கழிப்பதற் கென்று பல கூடுகள் அமையும்படி கட்டிடத் தைக் கட்டுவது நம் நாட்டில் பண்டைய வழக்காகும். இந்தக் கூடுகள் இறை எனப்படும். மாடங்களை அமைக்கும்போது அவைகளில் இறைகளை வைக்க வேண்டும் என்பது சிற்பதர்மம். இந்தச் செய்தி,

“ பள்ளியம் புறவு இறை பொருந்து மாளிகை
தள்ளரும் தமனியத் தகடு வேய்ந்தன ”

என்று கம்ப ராமாயணத்துள் குறிக்கப்பட்டுள்ளது. மாடங்களில் தங்குவதனால் புறாக்கள் மாடப்புறா எனப்படுவதும் உண்டு.

நம்மவர்கள் முன்காலத்தில் பொழுது போக்குக்காகப் புறாக்களை வளர்த்து வந்தார்கள். உலகத்தில் பல நாடுகள் புறாக்களின் மூலம் கடிதங்களை அனுப்பி வந்ததுண்டு. போர்க்காலங்களில் இவற்றின் சேவை பாராட்டற்குத் தகுந்ததாக இருந்தது என்று தெரிகிறது. தற்காலத்தில் அமெரிக்க விஞ்ஞானிகள் புறாக்களைக் கொண்டு பல வேலைகளைச் சாதித்துக்கொள்ள முடியும் என்று தெரிந்து கொண்டு ஆராய்ச்சி செய்துவருகிறார்கள்.

கோழிவளர்ப்புக்கு அடுத்தபடி நம் நாட்டில் புறா வளர்ப்புப் பல இடங்களில் வியாபித்திருக்கிறது. விடுமுறை, திருவிழா நாட்களில் புறாவளர்ப்பவர்கள் தங்கள் புறாக்களைப் ‘ பறக்கும் பந்தய’ங்களுக்கு விட்டு மகிழ்ச்சியுடன் காலங்கழிப்பதுண்டு. ஒரு புறா 200 மைல் தூரம் வரையிலும் பறந்து சென்று மீட்டும் தன்னிடத்தை அடையும். இடங்களின் அடையாளத்தை அவை மறப்பதே இல்லை. அவை மற்றப் பறவைகளைவிட அதிக தூரம் விரைவில் பறக்கக் கூடியவை. இறைச்சிக்காகவும் பலர் இவைகளை வளர்த்து வருகிறார்கள்.

## கற்புடைமை

ஆண் புறாவும் பெண்புறாவும் இணைபிரியாத தம்பதி. அவற்றின் காதல் சாகும் வரையில் உறுதி


யாக நிற்கும். ஆண்பறவையோ பெண்பறவையோ எதுவும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கற்பொழுக்கம் தவறுவதே இல்லை. மனிதரோடு இரண்டும் நெருங்கிப் பழகி உறவு கொண்டாடும். ஒன்று பிரிந்தால் மற்றொன்று அதன் பொருட்டு உயிரையும் அர்ப்பணம் செய்யக்கூடும்.

பெண்புறா 6 அல்லது 8 மாதத்தில் கருக்கொள்ளும். அது மாதத்துக்கு இரண்டு முட்டை இடக்கூடும். ஒவ்வொரு மாதத்துக்கு இரண்டாக அது 12 மாதமும் முட்டை இடும். முட்டைகளை அடைகாத்து அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தவுடன் பெண்புறா மறுபடியும் முட்டை இட்டுவிடும். அடைகாப்புக் காலம் 17 முதல் 19 நாள். ஆகவே குஞ்சுகள் வெளிவந்த இரண்டு வாரத்துக்குள் பெண்புறா அவைகளைக் காப்பதற்கு இல்லாமல் புதிதாக இட்ட முட்டைகளை அடை காக்கச் சென்றுவிடும். முன்பு தோன்றிய குஞ்சுகள் பெரியனவாகும் வரையில் அவைகளுக்கு உணவு கொடுத்துப் பாதுகாத்துவருவது ஆண்புறாவே. புறாக்களிடம் இந்த இயல்பு இருப்பதனால் குஞ்சு வளர்ப்புக்கென்றும் அடைகாப்புக்கென்றும் நாம் ஒரு ஜோடி புறாக்களுக்கு இரண்டு அறைகளைக் கட்டித் தரவேண்டும்.

## புறாவின் கூடு

புறாவின் கூடு படத்தில் கண்டபடி அமைய வேண்டும். அக்கூட்டின் அறைகளில் மெத்தென்றிருப்பதற்காக வைக்கோல் விரிப்பையும் தயார் செய்யவேண்டும். புறாக்களைப் பாதிக்கும் தெள்ளு, பேன், உண்ணி முதலியவை அண்டாதபடி புகையிலைக் காம்புகளில் சிலவற்றைக் கூட்டில் வைப்பது

நல்லது. கரித்தூளும், சுண்ணாம்புக் கற்கள் அல்லது கிளிஞ்சில் ஓடுகளின் தூளும் ஒரு பாத்திரத்தில் எப்பொழுதும் கூட்டில் இருக்கவேண்டும்.



புருத் தம்பதிகள்

கூடு தெற்கேனும் கிழக்கேனும் பார்த்தவண்ணம் அமைய வேண்டும். கூட்டுக்குக் காற்றோட்டம் மிகவும் அவசியம். காலையில் சூரியன் உதயமாகும் போது புருக்கள் வெளியே வந்து இளவெயிலை நுகர்ந்து ஆனந்திக்கும். இதனால் அவைகளுக்கு ஆரோக்கியம் பெருகுகின்றது.

## வேறு உபகரணங்கள்

உயரமான இடங்களில் இப்படியும் அப்படியும் நடந்து பொழுதுபோக்குவதில் புருக்களுக்கு விருப்பம் அதிகம். அதனால் உயரமான இடத்தில் 6 அங்குல அகலமுள்ள பலகைகளை நிறுத்தி வைப்பது அவசியம். பலகையின் நீளம் 10 முதல் 20 அடி இருக்கலாம். நம் நாட்டில் பலர் இதனைச் செய்து கொடுப்பதே இல்லை. இதில் முக்கியமாகக் கவனம் செலுத்துவார்களாக. பலகை ஊசல்போல் ஆடுவதாக அமையுமேல் புருக்கள் பின்னும் அதிகமாக மகிழ்ச்சி கொள்ளும்.

செயற்கைக் குளம்: புறாக்கள் சுத்தமுள்ள பிராணிகள். பிரதி தினமும் அவை குளிக்கும். குளிப்பதற்காக அவைகளுக்கு 4 அங்குல ஆழமுள்ள நீர்த் தொட்டிகளை நாம் தயார் செய்து கொடுக்க வேண்டும். ஒரே தொட்டியில் பல புறாக்கள் குளிக்கின்றன. ஆகவே தொட்டியின் நீள அகலங்கள் போதிய அளவில் இருக்கலாம். ஆனால் ஆழம் மட்டும் 4 அங்குலத்துக்குமேல் இருத்தல் ஆகாது. தொட்டி நீரை அன்றன்று மாற்றிச் சுத்தம் செய்வது அவசியம்.

## உணவு கொடுத்தல்

புழு பூச்சிகள், பச்சை உணவு முதலியவற்றைப் புறாக்கள் விரும்புவதில்லை. தவிட்டையும் சாப்பிடுவதில்லை. தானியங்களே அவற்றின் முக்கிய உணவு. கெட்டியாக இருக்கும் பருப்புக்களையும் தானியத்தையும் அவை மகிழ்ச்சியுடன் உட்கொள்ளுகின்றன. இவற்றை நாம் அவைகளுக்குத் தினமும் குறித்த வேளைகளில் தரவேண்டும். தாமாக அவை தம் உணவைத் தேடிக்கொள்வதில்லை. தம் வயிற்றை நிரப்பிக்கொள்ள அவை தங்கள் எஜமானர்களையே எதிர்பார்க்கின்றன. சூரியகாந்தி விதைகள் எல்லாப் பறவைகளுக்கும் ஏற்ற சிறந்த உணவு. அந்த விதைகளில் ஊன் பொருள் மிகுதியாக இருக்கிறது. புறாக்களுக்கு இந்த விதைகளைப் போட்டு வந்தால் 15 அல்லது 20 நாளில் அவை கொழுத்து விடக்கூடும். மக்காச் சோளத்தைத் தின்பதில் அவைகளுக்கு ஆசை அதிகமாக இருக்கிறது. கெட்டியாக உள்ள சத்துள்ள தானியமல்லவா மக்காச் சோளம். ஆகவே அதனைத் தினமும் புறாக்களுக்குத் தருவது நல்லது.

புறா சுத்தமான பிராணி என்றோம். அது தூய நீரை அன்றி அசுத்தமான ஜலத்தைத் தொடுவதே இல்லை. நல்ல தண்ணீர் கிடைக்காவிடில் புறா தாகத்தால் வருந்தி அவதிப்படுவதுண்டு. ஆகவே நாம் அதற்குத் தூய குடி ஜலத்தை வைக்க வேண்டும். ஜல பாத்திரத்தைத் தினமும் சுத்தி செய்யவேண்டும்.

புறா வளர்ப்பு மற்றப் பறவைகளின் வளர்ப்பை விட எளிது. வளர்ப்புக்கு அவசியமானவற்றைத் தயார் செய்துகொண்டு சில புறாக்களை வாங்கி வைத்துவிட்டால் நம் வீட்டிலுள்ள சிறுவர் சிறுமியர் கூட அவைகளை எளிதில் கவனித்துக்கொள்ளலாம். ஒரு தடவை பழக்கமான புறா யதேச்சையாக வெளியே சென்றாலும் தான் பழகிய இடத்துக்கு மறுபடியும் அவசியம் திரும்பிவிடும். அதைத் தேடும் கவலை நமக்கு வேண்டாம். எல்லா வகைகளிலும் எளிதாக இருக்கும் புறா வளர்ப்பு நம் நாட்டில் ஓங்குக.

Printed at the Rajan Electric Press, Madras-2.

திரு ச. கு. க. எழுதிய வேறு நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | கறவை மாடு | விலை ரு. 1-8-0 |
| 2. | வீட்டு ரோஜா | ... 0-6-0 |
| 3. | இங்கிலீஷ் காய்கறிகள் | ... 0-3-0 |
| 4 | கோழிமுட்டை உற்பத்தி | ... 0-3-0 |
| 5. | தென்னாட்டுப் பழங்கள் | ... 0-3-0 |
| 6. | கோழிப் பண்ணை | ... 2-0-0 |
| 7. | காய்கறிப் பயிர்முறை | ... 2-8-0 |
| 8. | சிங்காரத் தோட்டம் | ... 2-0-0 |
| 9. | தோட்டக் கலை | ... 4-0-0 |
| 10. | தென்னை வளர்ப்பு | ... 1-4-0 |
| 11. | தேனீ வளர்ப்பு | ... 1-4-0 |
| 12. | ஆடு வளர்ப்பு | ... 1-12-0 |
| 13. | பண்ணை வாழ்க்கை | ... 4-0-0 |


## கிராம ஜோதி நூலகம்

15/1, மந்தைவெளி லேன்

மயிலாப்பூர் : : சென்னை